# லைலா மஜ்னு

முஹம்மது ஸெயின் J. P; M. M. C.

வெளியிடுவோர்:
ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பனி லிமிடட்
703 ஸிரிமாவோ பண்டாரநாயக மாவத்தை
கொழும்பு 14.

RangaRakes Tamilnavarasam.com

முதற் பதிப்பு 1977

அச்சிட்டோர்:
த டயமண்ட் பிரிண்டர்ஸ்
41 சென் மைகல் ரோட்
கொழும்பு 3.

லைலா என்பதின் கருத்து
நள்ளிரவின் முத்தென்பதாகும்

அவள் தொடுவானத்தில் தோன்றும் சந்திரமதியைப் போன்று அவ்வளவு அழகாக இருந்தாள். இருண்ட வானத்தை ஒளியுள்ளதாகச் செய்யும் கோடானுகோடி நட்சத்திரங்களே போன்று இவளின் பிரகாசம் பொருந்திய மேனி தகதகவென ஜொலித்தது. முற்ருகக் கருநிறத்தையுடையதாக இருந்த இவளின் உரோமம் இப்பிரகாசத்தைப் பன்மடங்காகச் செய்தது; வில் வளேவே போன்ற புருவத்தில் அடக்கப்பட்டிருந்த இவளின் கண்கள் கூரிய பார்வையை உடையதாகவும் பிரகாசமிக்கதாகவும் இருந்தன. உறுதியாக அமைந்திருந்த இவளின் அழகிய உதடுகள் இவள் புன்முறுவல் செய்யும் பொழுது சற்றுப் பிரிந்து செல்வது காலைப் பொழுதில் கிழக்கு வானில் செந்நிறமாகக் கதிரவன் தோன்றுகையில் உள்ளக் களிப்பை உண்டு பண்ணுவது போன்று பார்ப்போரைப் பரவசமடையச் செய்யும். காதல் இவளேக் கொள்ளே கொண்ட பொழுது இவள் தன் காதலனின் மார்பில் வைத்து நசுக்கிவிடுவதற்காக சுவர்க்

RangaRakes Tamilnavarasam.com

கத்திலிருந்து பறிக்கப்பட்ட ஒரு செவ்ரோஜா வைப் போன்று காட்சியளித்தாள். இவள் காதலனுக்கும் ஒருவிதத் துக்கம் தன்னை அறியாமலே தோன்றியிருந்தது போலும்! அந்தோ பரிதாபம்! இவளை அஹ்ரிமானின் கையிலிருந்து உர்மாஸ் பிடுங்கி எடுக்கையில் வாடி வதங்கிச் சிதைந்து போவதற்காகச் சுவனபதியிலிருந்து ஒரு ரம்மியமிக்க ரோஜாப் புஷ்பம் பறித்தெடுக்கப்படுகிறது.

காதலால் இழுக்கப்பட்ட லைலா, நள்ளிரவில் தன் இல்லத்தை விட்டு வெளிவந்தாள். கவிகளால்கூட வர்ணிக்க முடியாத அவ்வளவு அழகிய ஆடை ஆபரணங்களை அவள் அணிந்திருந்தாள். தன் காதலனைக் கழிபேருவகை கொள்ளச் செய்ய வேண்டுமென்பதற்காக இவள் பேராச்சரியமான ஆடைகளை அணிந்து வந்தாள் போலும். இவள் பூரணச் சந்திர ஒளியில் தோன்றியபொழுது அங்கு வீசிக்கொண்டிருந்த இளந்தென்றல் இவளின் காதல் கதையை அக்கம் பக்கத்திலிருந்த செடி கொடிகளிடம் கூறியது. அதேசமயத்தில், சந்திரனின் பிரகாசத்தால் ஒளி மங்கியிருந்த நட்சத்திரங்கள் லைலாவைக் கண்ட உற்சாகத்தினால் எழுப்பப்பட்டு அங்கு ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்த லைலாவை நோக்கி, "லைலா மறைந்துவிடவில்லை; இவள் எங்களிடமிருந்து தோன்றியவள்; அவள் நம்மிடம் மீண்டிருக்கிறாள். அதோ பார்! அதோ பார்! லைலா அமர்ந்திருக்கும் இரவு பிரகாசம் பொருந்தியிருக்கிறது. லைலா அமர்ந்திருக்கும் எல்லையே அழகு பெற்று ஜொலிக்கிறது" என்று கூறுவது போலிருந்தது.

சந்திரன் ஏகமானதேயாயினும் இது பல நதிகளிலும் பிரதிபிம்பிப்பதே போன்று லைலாவின் அழகு எல்லாருடையவும் இதயங்களைக் கொள்ளை கொள்ளச் செய்தது. லைலாவின் தந்தை ஒரு மாபெருந் தலைவர். இவளின் ஆச்சரியத்துக்குரிய அழகைக் கேள்வியுற்று பல தேசங்களையும் சார்ந்த இளவரசர்களும்கூட இவரிடம் வந்தார்கள். ஆனால் எவராலும் இவளை அடைய முடியவில்லை. ஐஸ்வர்யங்களாலும், அரச தர்பார்களின் ஆடம்பரங்களாலும் லைலாவை வெற்றி கொள்ள முடியவில்லை; ஆயினும் எமன் தேசத்தின் ஒரு மாபெருந் தலைவரின் மைந்தனாகிய இருந்த கைஸ் தான் லைலாவின் இதயத்தில் இடம்பெறும் பாக்கியத்தை அடைந்தார்.

துரதிர்ஷ்டவசமாக லைலாவின் தந்தை கைஸின் தந்தையோடு சினேகப்பான்மையில் இருக்கவில்லை. உண்மையில் இவர்கள் இருவருக்குமிடையில் அடிக்கடி யுத்தங்கள் மூள்வதுண்டு.



RangaRakes
Tamilnavarasam.com

இவர்களுக்கிடையிலிருந்த பகைமை தலைமுறை தலைமுறையாக வருவது. இவர்களின் மூதாதையர்கள் சண்டையிட்டுக் கொண்டதனால் இது இவர்களுக்கிடையில் குடும்பப் பகையாக முடிந்திருந்தது. பெரும் திருநாட்களின் போதும், கொண்டாட்டங்களின் போதும் இவர்கள் சந்திப்பதுண்டு. இவ்விதச் சந்திப்புகளின் பயனாய் இவர்கள் சிறிது காலத்துக்கு இவர்களுடைய பகைமையை மறந்துவிடுவதுண்டு. இவ்வித நிலைமை ஏற்பட்ட காலங்களில்கூட இவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து முகமன் கூறுகையில் இவர்களின் கண்களில் பகைமை உணர்ச்சி ததும்புவதைக் காணலாம். இவ்விதச் சந்திப்பு எப்பொழுதும் ஏற்படுவதுண்டா? இல்லை; எப்பொழுதும் ஏற்படுவதில்லை. ஆனால் ஒரு குறித்த கொண்டாட்டத்தில் இவர்கள் ஒன்றாகக் கூடுவதுண்டு. இப்படிப்பட்ட ஒரு கொண்டாட்டத்தின் போதுதான் நமது வனப்புமிக்க வாலிபர் கைஸ், லைலாவை முதன்முதலாகச் சந்தித்தார். வாய்விட்டுப் பேசிக்கொள்ள முடியாதிருந்ததேயாயினும் இவர்களுடைய கண்கள் பேசிக்கொண்டன. வார்த்தைகள் மாற்றிக்கொள்ளப்படவில்லையேயாயினும் இளங் காளைகளான இவர்கள் இருவர் உள்ளத்திலும் காதல் ஆழமாகப் பதிந்துவிட்டது. இச்சமயத்திலிருந்து கைஸ்



முற்றும் மாறுபட்ட ஒரு வாலிபராகக் காணப்பட்டார். இவர் களியாட்டங்களில் கலந்துகொள்ளாதிருந்துவிட்டார்; விருந்தின் போதும் இதன் பிறகு எல்லோரும் ஒன்று கூடியபொழுதும் மௌனமாக இருந்துவிட்டார்; இவர் தனிமையாக உட்கார்ந்திருந்தார்; இவரின் கண்களில் ஒருவித நூதனத் தோற்றம் காணப்பட்டது. இவரின் சிநேகிதர்களாலோ அல்லது வேறு எந்த வாலிபராலோ இவரை விளையாட்டிற்குக் கொண்டுவர முடியவில்லை. எந்தக் கன்னிகையாலும் இவருக்கு ஆறுதல் அளிக்க முடியவில்லை. இவரின் உள்ளம் வேறொரு குடும்பத்தை நோக்கிச் சென்றிருந்தது. இது இவரின் தந்தையுடைய விரோதியின் குடும்பம்.

லைலாவின் நிலைமையும் இவ்வாறுதானிருந்தது. இவள் தனது தோழிகளின் மத்தியில் அமர்ந்திருந்தாலேயர்யினும் எதுவும் பேசாது தன் பார்வையைக் கீழே செலுத்திக் கொண்டிருந்தாள். இவ்வமயம் அங்கிருந்த அழகிய அணங்குகளில் ஒருவள் தனது வீணையின் உதவியோடு பூரணச் சந்திர இரவின் ஒளியில் ஒரு நீரருவியின் அருகில் காதலர்கள் கூடி விளையாடுவதைப் பற்றி ஓர் இனிய கீதத்தைப் பாடினாள். இதுகாறும் தனது தலையைத் தாழ்த்திக் கொண்டிருந்த லைலா ஏதோ ஒருவித உள்ளக் களிப்பினால் உந்தப்

RangaRakes
Tamilnavarasam.com

பட்டு இக்கீதம் முடிவுறும்போது தனது சென்னியை உயர்த்தி இக்கீதத்தை மீண்டும் பாடுமாறு வேண்டினாள். இவ்வாறு இதே கீதம் மூன்று முறைகள் பாடப்பட்டன. இதன் பிறகு மாலைவேளைகளில் கதிரவன் தனது பல வர்ணக் கதிர்களையும் மர உச்சிகளிலும் வீசி இயற்கை அழகின் அற்புதங்களைக் காட்டுகையில் லைலா தனது தந்தையின் பூஞ்சோலைகளில் தனிமையில் உலாத்தி வருவாள். மாலைப்பொழுதில் உலாவச் செல்லும் வழக்கம் இராப்பொழுதிலும் செல்லுவதாக முடிந்தது. ஒரு மாதரசியின் உள்ளத்தில் காதல் உணர்ச்சி நன்கு வேலைசெய்ய ஆரம்பித்து விடுமாயின் இவள் தனது இயற்கையான அச்சத்தையும்கூட இழந்துவிடுகின்றாள். ஆகவே இராப்பொழுதிலும் லைலா வெகு தூரம்வரை ஏகாந்தமாக உலாவச் சென்றதில் ஆச்சரியமில்லை. இவ்வாறு ஒரு பூரணச் சந்திர இரவில் உலாவச் செல்லுகையில் லைலா நீண்ட தூரம்வரை சென்று தனது தந்தையின் சோலையை அடுத்திருந்த பெரிய கானகத்தை அடைந்தாள். தனது ஆழ்ந்த சிந்தையில் — சந்திரப் பிரகாசத்தில் இவள் சென்றுகொண்டிருந்தாலாதலின் தான் எங்கு செல்வதென்பது இவ்வணிதைக்கு விளங்கவில்லை. தன் சோலையின் எல்லையைக் கடந்து செல்லுகையில் இவ்வணங்கு தன்



முன் குறுக்கிட்ட விரிந்த கிளைகளையுடைய ஒரு மரத்தண்டை வந்து நின்றாள். இம்மரத்தின் இரு பெரும் கிளைகளினூடே தெரிந்த ஒரு சிறு திறந்தவெளி லைலாவின் மனதைக் கவர்ந்தது. இன்னும் சற்றுக் கூர்ந்து நோக்குகையில் பூரணச் சந்திரப் பிரகாசத்தினால் ஜொலித்துக் கொண்டிருந்த இவ்விடை வெளியில் ஓர் அழகிய நீரருவி அமைந்திருந்தது. இந்நீரருவிதான் தன் அருமைத் தோழிகளில் ஒருத்தியால் பாடப்பட்ட இன்னிசைக் கீதத்தில் கண்ட அழியாப் புகழ்வாய்ந்த நீரருவி என்பதை இவ்வணங்கு விளங்கிக் கொண்டாள். இந்நீரருவியின் அருகில் தான் சந்திர ஒளியின்போது காதலர்கள் சந்தித்து உல்லாசமாக விளையாடுவார்கள் என்று பாடப்பட்டது. இங்குதான் ஞாபகத்துக்கு எட்டாத காலம் தொட்டு காதலர்கள் ஒன்றுகூடி பிரதிக்கினைகள் செய்துகொண்டார்கள். இந்த நடுநிசியில் இவ்வளவு தூரம் வந்து காதலர்களை ஒன்றுசேர்க்கும் இவ்வழியாப் புகழ்வாய்ந்த நீர் அருவியின் பக்கலில் இருப்பதை நினைவிற் கொண்ட லைலாவின் உள்ளத்தில் தோன்றிய ஒருவிதத் துணிச்சலான உணர்ச்சியினாலும், அதிர்ச்சியினாலும் இப்பாவையின் தேகம் நடுங்க ஆரம்பித்தது. திடீரென இவளின் முகம் சிவந்து விட்டது; இவளின் இருதயம் வேகமாக அடிக்க

RangaRakes

Tamilnavarasam.com

ஆரம்பித்தது; இவ்வித உணர்ச்சியில் தன் தந்தையின் மாளிகையை நோக்கி வேகமாக ஓடினுள். தான் செய்தது ஒரு பெண் அணங்குக்கு அடுக்காத் துணிகரச் செய்கை என்பதை எண்ணி ஓடினுள் போலும்!

இதன் பிறகு லேலா இரவில் உலாவச் செல்லத் துணிவுகொள்ளவில்லே. மாலே வேலேகளில் சிறிது நேரம் தன் மாளிகையைச் சேர்ந்த சோலேகளில் திரிந்துவிட்டு வீடு திரும்பிவிடுவாள். இதைத் தவிர இவ்வணங்கு வேறு எதுவும் செய்வதாயில்லே. தன் மனத்தில் பெரும் பளுவாக இருந்துவரும் காதல் கதையை எவரிடமும் எடுத்தியம்புவதற்குத் துணிவு எழவுமில்லே; இவளுக்காகச் சிறிது ஆறுதலே அளிப்பவைகளாக இருந்தவை இவளின் இரு வெண்புருக்களாகும்.

லேலாவின் தந்தைக்குரிய மாளிகை ஓர் அரச மாளிகைக்கொப்ப அவ்வளவு அற்புத அலங்காரத்தை உடையதாக இருந்தது. இம்மாளிகையின் ஓர் உன்னத அறையில் லேலா ஓய்வுகொள்ளச் செல்வது வழக்கம். இவ்வறையின் ஒரு சாளரத்தின் அருகே நின்றுகொண்டு அங்கிருந்த மர உச்சிகளே உற்றுநோக்கிக் கொண்டிருப்பாள். நீண்ட நாட்களாகத் தன்னிடம் மிக்க அன்பாக வளர்ந்து வரும் இரு வெண்புருக்களும் இரு



மரங்களில் மிக்க உல்லாசமாக விலேயாடிக் கொண்டிருக்கும். லேலாவின் தொனியைக் கேட்டதும் இப்பறவைகள் விரைந்து வந்து இவளின் தோள்களில் அமர்ந்துகொண்டு 'கூ...கூ...கூ' வென இறைவதோடு லேலாவின் கன்னங்களே மிருதுவாகக் கொத்தும். லேலாவின் தலேயிலும் தோள்களிலும் உட்கார்ந்து இப்பறவைகள் அங்குமிங்குமாக விளேயாடுவது இவளுக்கு ஒரு வித உற்சாகத்தை அளித்து வந்தது. இப்புருக்களுக்கு லேலா தன் உள்ளங்கையில் வைத்து உணவளித்துவிட்டு, ஒன்றைத் தன் மார்பில் அணேத்துக்கொண்டு மற்றதை சாளரத்துக்கு வெளியே வீசுகையில், வீசப்பட்ட இப்பறவை அங்கொரு மரத்தில் அமர்ந்து கொண்டு தன் தோழியைக் கூவிக்கூவி அழைக்கும். லேலா தன் மார்பில் அணேத்துக் கொண்டிருக்கும் பறவையை விடுவிக்கும் வரை இப்பறவை இவ்வாறு கூவிக்கொண்டே இருக்கும். தன் கையிலுள்ள பறவையை விடுவிக்கையில் அது தன் தோழனே அடைந்து மிக்க அன்னியோன்னியத்தோடு குலாவிக்கொண்டிருக்கையில் லேலா பெருமூச்சு விடுவாள். ''ஆ! சிறகுள்ள பறவை தன் காதலனேத்தேடிப் பறந்து செல்கிறது; அந்தோ என்னுல் பறக்க முடியவில்லேயே; எனக்கும் சிறகு இருந்திருக்குமாயின் எவ்வளவு நன்முக இருக்

RangaRakes

Tamilnavarasam.com

கும்'' என்று லைலா தனக்குள்ளேயே கூறிக் கொள்வாள். ஆயினும் இச்சிறகையுடைய பறவையின் மூலமாகத்தான் தன் காதலனிடமிருந்து இவளுக்கு சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளித்த உருக்கமானவொரு நிருபம் வந்தது. இக்கடிதம் சந்தோஷத்தையும் பயத்தையும் அளிப்பதாக இருந்தது. இதே கடிதம்தான் இவளைக் காதலர்கள் சந்திக்கும் இடத்துக்கு இழுத்துச் சென்றது.

கைஸ் எப்பொழுதுமே முகவாட்டமுடனிருப்பது இவரின் நண்பர்களுக்கும் தாய்தந்தையருக்கும் கவலையைத் தந்தது. எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தையில் ஆழ்ந்திருந்த கைஸுக்கு லைலாவின் இரு வெண்புறுக்களின் கதை ஞாபகத்துக்கு வந்தது. பொதுமக்களுக்கிடையில் நன்கு பரவியிருந்த இப்புறுக்களின் கதை கைஸுக்கு எட்டியது இவருக்கு ஒருவிதத்தில் ஆறுதல் அளிப்பதாக இருந்தது. இக்கதை கைஸின் ஞாபகத்துக்கு வந்தவுடன் தனது தலையை உயர்த்திக் கொண்டு ''நான் அவளின் தந்தையிடம் சென்று அவளை நான் வரித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கோருவேனுயின் இவர் என்னை எவ்வாறு நடத்துவார்? நான் ஒரு தூதரை அனுப்பினுல் அத்தூதரை இவர் எவ்வாறு வரவேற்பார்? ஆனுல் லைலாவின் புறுக்கள் நேரடியாக என்னுடைய தூதை லைலாவினிடமே எடுத்துச் செல்லக் கூடுமாயின் அது பெரிதும் சாதகமாக இருத்தல் கூடும். இப்புறுக்கள் லைலாவின் அறை ஜன்னலில் புகுந்து லைலாவின் மார்பில் போய் தங்குவதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையாயின் நான் நினைப்பதை நிறைவேற்றுவது கடினமாக இராது என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டான்.



இப்புறுக்களின் மூலம் தூதனுப்புவதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந்த கைஸ் தனது சேவகனை ஜைதைக் கூவியழைத்தான். தனது எஜமானிடம் பெரிதும் பக்ஷம் பாராட்டி வந்த ஜைத் உடனே இவ்வழைப்பிற்கு பதில் கூறினுன்.

''ஜைத்! பஸராவின் தலைவருடைய மாளிகையில் இரு வெண்புறுக்கள் இருப்பதைப் பற்றி நீ கேள்வியுற்று இருக்கிருயல்லவா? இவைகளிலொன்று தனது எஜமானியின் உத்தரவுக்குப் பணிந்து குறித்த இடத்திற்குப் பறந்து சென்று எஜமானியின் கையிலுள்ள மற்றப் பறவை வரும் வரை இடைவிடாது கூவி அழைத்துக்கொண்டே இருக்குமென்று கூறப்படுகிறது'' என்று கைஸ் ஜைதிடம் கூறினுர்.

ஜைத்: ''இவ்விஷயத்தை நான் நன்ருக அறிவேன் எஜமான்; இவைகள் வீட்டில் பழக்கப்

RangaRakes

Tamilnavarasam.com

பட்ட பறவைகள். தன் எஜமானி அழைக்கையில் இவை எஜமானியின் கையிலும் தோளிலும் வந்து அமர்கின்றன''.

கைஸ்: ''அப்பறவைகள் உன் கைக்கு வரும் என்று நீ நினைக்கிறாயா?''

தனது எஜமானின் உள்ளக் கிடக்கையை நன்கு அறிந்திருந்த ஜைத் இக் கேள்விக்கு வேறு விதமாகப் பதில் அளித்தான்.

ஜைத்: ''ஓ பிரபு! இப்புறுக்களைப் பெறவேண்டுமென்பது தங்களது விருப்பமா? எனது தந்தை அடர்ந்த வனத்தில் வசித்து வந்தவர். இவர் பறவைகளை நாசூக்காகப் பிடிப்பதில் கைதேர்ந்தவர். நான் இவ்வித்தையை நன்றாகக் கற்றிருக்கிறேன். ஒரு வீட்டில் வளர்க்கப்படும் புறுவை மாத்திரமன்றி காட்டில் வதியும் பலவிதப் பறவைகளையும் நான் பிடித்திருக்கிறேன். ஒரு பறவைக்கும் எவ்விதத் தீங்கும் இழைக்காது அதனைக் கையால் மிருதுவாகப் பிடிக்கும் இரகசிய வித்தைகூட எனக்குத் தெரியும்''

கைஸ்: ''அவ்வாறாயின் நீ இப்பொழுதே சென்று லைலாவின் இரு வெண்புறுக்களில் ஒன்றை இங்கே கொண்டு வா. ஆனால் அதற்கு எவ்விதத் தீங்கும் விளையக் கூடாது. அதன் இறக்கை ஒன்றுக்கேனும் ஹானி விளையக் கூடாது''.



ஜைத் பூரண விசுவாசத்தையுடைய நல்ல சேவகன். ஜைத் கூறியவை பூராவும் இதயபூர்வமான உண்மையாகும். இவன் உத்தரவு பெற்றுச் சென்ற மூன்றாவது தினம் கைஸ் விரும்பிய புறுக்களில் ஒன்றைக் கொணர்ந்து தன் எஜமான் கையில் கொடுத்தான். கைஸ் இப்புறுவைக் கெயிலெடுத்து சிறிதுபோழ்தைக்குத் தடவிக் கொடுத்தான். பிறகு அதை ஜைதிடம் கொடுத்துப் பிடித்துக்கொள்ளச் சொல்லி, தான் ஏற்கெனவே மிக்க மெல்லிய மிருதுவான காகிதத்தில் எழுதி வைத்திருந்த ஒரு சிறு நிருபத்தை அதன் காலில் கட்டினான். இந்நிருபத்தில் இவ்வாறு வரையப்பட்டிருந்தது:

> ''இவ்வெண்புறுவைப் போன்று அவ்வளவு பரிசுத்தமாகவுள்ள உன்னுடைய இருதயம் என்னிடம் வந்திருக்கிறது. அப்பாலுள்ள மரங்களிலிருந்து பறந்து வந்துள்ள இப்புறு உன்னுடைய கனிந்த காதலை என்னிடம் கொணர்ந்திருக்கிறது. உன்னுடைய இதயம் இனி ஒரு பொழுதும் உனக்குச் சொந்தமாக இருக்க முடியாது. ஏனெனில் அது என்னிடமே இருந்து வரும். ஆயினும்

RangaRakes

Tamilnavarasam.com

இவ்வளவு தூரத்திலிருந்து வரும் நான் எவ்வளவு தவிக்கிறேன் என்பதையும் எனது உள்ளம் எவ்வாறு பதைபதைக்கிறது என் பதையும் நீ தெரிந்துகொள்ள வேண்டும்''.

''ஆங்கோரிடத்தில் காதலர்கள் கூடும் நீரருவி ஒன்றிருக்கிறது. இன்று இரவு உனக் காக நான் அங்கு காத்திருப்பேன். மரக் கிளைகளில் பறவை இனங்கள் எவ்விதக் கட் டுப்பாடுமின்றிச் சர்வ சுதந்திரத்துடன் கூடி விளையாடுவது போன்று நாம் கூடிக் களிப்புற வேண்டுமென்று விரும்புகிறேன். ஓ எனது ஆருயிரே! அப்பாலுள்ள மரத்தி லிருக்கும் பறவையைத் தேடி அதன் தோழி பறந்து செல்வது போன்று என்னிடம் விரைந்து வருவாயாக''.

# 2

## காதலர்கள் செய்துகொண்ட கடும் பிரதிக்ஞை

வழக்கம்போல் லைலா தன்னுடைய புறாக்க ளில் ஒன்றைப் பறக்கவிட்டுவிட்டு, தன் மார் பில் அணைத்துக்கொண்டிருந்த மற்றொரு புறாவை வெளியில் சென்ற புறா கூவி அழைக்கும்வரை கையில் வைத்துக் கொண்டு காத்திருந்தாள். இவள் இவ்வாறு நீண்ட நேரம் காத்திருந்தா ளாயினும் வழக்கமான இடத்திலிருந்து அது கூவி அழைக்கவில்லை. மாளிகையின் நாற்புறங் களிலும் தேடிப் பார்த்தாளேயாயினும் இப் பறவை அகப்படவில்லை. தனது சாளரத்தின் அருகே வந்து கையிலிருந்த புறாவை வெளியில் காட்டியவாறு மற்றப் புறாவின் குரலோசை கேட்கிறதாவென்று லைலா மிக்க ஆவலோடு காது தாழ்த்திக் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால், எவ்விதக் கூவுதலையும் கேற்க முடியா ததைக் குறித்து ஏமாற்றம் அடைந்தவளாய் ''இதற்கு என்ன நேர்ந்திருக்கக்கூடும்? இது எங்கேனும் தூரம் பறந்து சென்றிருக்க முடி யுமா? இதற்கு முன் எப்பொழுதேனும் இவ் வாறு நிகழவில்லை யாதலால் அவ்வாறு சென்

RangaRakes

Tamilnavarasam.com

றிருக்க முடியாது. ஒரு வேலை இது மரக்கிளைகளில் துயில் கொள்ளுகிறது போலும்'' என்று தனக்குள்ளேயே கூறிக்கொண்டாள்.

இவள் தன் புறாவை எதிர்பார்த்திருந்த தன் பயனாய் நேரம் கழிந்துவிட்டதைக்கூட அறிந்து கொள்ளவில்லை. சந்திரன் வானத்தில் மென் மேலும் உச்சி நோக்கி உயர்ந்துகொண்டிருந்தான். இருளடைந்திருந்த மரங்களும், ஒதுக்கிடங்களும் சந்திரனின் வெண் கதிர்களால் பிரகாசிக்க வாரம்பித்தன. ஆனால் தன் புறாவைப் பறிகொடுத்திருந்த லைலாவுக்கு உலகெல்லாம் இருண்டிருந்தது. அப்ஸோஸ்! தன் பறவையினிடமிருந்து கூவுதல் வரவுமில்லை. குரலோசை கேட்கவுமில்லை. இறுதியில் தன் கையிலிருந்த பறவையைத் தட்டிக்கொடுத்து அதனிடம் அன்பாக உரையாடினாள். ''உன் காதலனை நீ அழைத்துவா'' என்று கூறி லைலா இப் பறவையைச் சாளரத்தின் வெளியில் வீசினாள்

இப் பறவை வழக்கம்போல் தான் செல்லும் மரத்திற்குச் சென்று நீண்ட நேரம் கூவிக்கொண்டிருந்தது. ஆனால் இதற்கு பதில் கூவுதல் எதுவும் வரவில்லை. இதன் பிறகு இப்பறவை தங்கியிருந்த மரக் கிளையிலிருந்து கிளம்பிப் பல தடவைகள் மாளிகையைச் சுற்றிச் சுற்றி வருவதை லைலா பார்த்துக்கொண்டிருந்



தாள், பல முறைகளிலும் இது தனது இறக்கைகளை அடித்துக் கொண்டு தனது ஏமாற்றத்தை அறிவிப்பதை லைலா கண்டாள். இறுதியில் இது ஜன்னலில் வந்து அமர்ந்தது. இதை லைலா தன் கையிலெடுத்து மார்பில் அணைத்த பொழுது அது அசாதாரணமாகத் துடித்துக் கொண்டிருந்ததை கண்டாள். நிச்சயமாக அது தனக்கிருந்த துக்கத்தினால் துடித்துக்கொண்டிருந்தது.

''ஐயோ பாவம்! அனாதைப் பறவை! ஒரு காதலனை இழப்பது சகிக்கக்கூடாத விஷயம் தான். ஆனால் காதலனைக் கண்டு கொள்ளாதிருப்பது இதைவிடக் கடினமான துக்கத்தைத் தருவதாகும்'' என்று லைலா தன் புறாவைத் தடவிக்கொண்டே கூறினாள்.

இவ்வாறு லைலா தன் பறவையைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருக்கையில் மற்றப் புறா இங்கு திடீரெனத் தோன்றி இவளின் தோளில் அமர்ந்தது. லைலா தன்னையும் அறியாது ஓர் ஆனந்தக் கூச்சலிட்டார்ள். இவ்விரு பறவைகளையும் எடுத்து மிக்க பாஷத்தோடு தடவிக் கொடுத்தாள். இவ்வாறு செய்கையில் காணாமற் போய் திரும்பிய பறவையின் காலில் ஏதோ



RangaRakes

Tamilnavarasam.com

ஒரு சிறு தடித்த பொருள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டாள். பறவையின் காலில்பிணைக்கப்பட்டிருந்த லிகிதத்தை அவசர அவசரமாக அவிழ்த்தெடுத்தாள். இவளின் இருதயம் படபடவென அடித்துக்கொண்டிருக்கையில் இதை இவள் பெரும் பரபரப்போடு வாசித்தாள்; இது தன் காதலனிடம் இருந்து வந்துள்ள நிருபம் என்பதை உணர்ந்தாள்; என்ன செய்வதென்பது இவளுக்கு விளங்கவில்லை. காதலர்கள் சந்திர ஒளியில் கூடும் நீர் அருவியின் ஸ்தலத்துக்குப் போகலாமா வென்று இவள் சிந்திக்கலானாள். ஒருவித முடிவிற்கும் வர முடியாதவளாய் இரு பறவைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக முத்தமிட்டாள். பிறகு ஒருவிதத் தீர்மானத்துக்கு வந்து இப் பறவைகள் இரண்டையும் கீழே விட்டுவிட்டுச் சீக்கிரமாக ஓர் நீண்ட அழகிய அங்கியை அணிந்துகொண்டு சத்தம் செய்யாமல் மேல் மாடியிலிருந்து கீழிறங்கி ஓர் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு வெளிச் சென்றாள். காதல் காட்டினூடே வழி காட்டியது; இவ் வழி லைலாவைக் காதலர்கள் சந்திக்கும் நீரருவியினிடம் கொண்டு வந்து சேர்த்தது. மரங்களினூடே வீசிக்கொண்டிருந்த சந்திர ஒளியில் ஓர் நிழல் ஊர்ந்து செல்வது போன்று விரைந்து போய்க்கொண்டிருந்தாள். இறுதியாக இவள் முத்துப் போன்ற தண்ணீர்த் துளிகள் விளையாடிக் கொண்டிருந்த திறந்த வெளியில் அமைந்திருந்த நீரருவியை அடைந்தாள். இந் நீரருவியிலிருந்து பசும் புற்களுக்கு மேல் பாய்ந்தோடிக்கொண்டிருந்த தண்ணீரின் பளபளப்பைத் தவிர லைலாவின் கவனத்தை வேறெதுவுமே ஈர்க்கவில்லை. அங்கு எவ்வித உயிர்ப் பிராணியும் புலப்படவில்லை.

லைலா தீர்மானமற்றவளாய் மர நிழலில் நின்றுகொண்டிருந்தாள். இவளின் இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. தான் விரைந்து வந்ததனால்தான் தன் இருதயம் இவ்வாறு துடிக்கிறதென்று இவள் நினைத்தாள். தன்னுடைய புறாவைக் கவர்ந்து சென்று அதை ஓர் நிருபத்தோடு திருப்பி அனுப்பியவர் எங்கிருக்கலாம்? என்று தன்னைக் கேட்டுக்கொண்டாள். சில விநாடிகளுக்குள் லைலாவின் மனதில் இவ்விதக் கேள்விகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி மறைந்துகொண்டிருந்தன.

சற்று தூரத்திலிருந்த கைஸின் கூரிய கண்கள் தாமதமின்றி லைலாவை நோக்கின. நிழலில் நின்றுகொண்டிருந்த லைலாவைக் கண்ட

RangaRakes

Tamilnavarasam.com

கைஸ் நீர் அருவியைக் கடந்து விரைவாகத் தன் காதலியை அடைந்தான்; நிழலில் நின்ற லைலா திறந்த வெளியில் வந்து நின்றாள்.

''நீங்கள் யார்?'' என்று லைலா சாந்தமாகக் கேட்டாள்.

நன்கு பிரகாசித்துக்கொண்டிருந்த சந்திர ஒளி இவர்கள் இருவருடையவும் முகத்தைத் தெளிவாகக்காட்டியது. இருவருடைய கண்களும் சந்தித்தன; வேறு வார்த்தைகள் உபயோகிக்கப்படவில்லை. ஏனெனில் முதல் பார்வையிலேயே இருவரும் ஒருவரையொருவர் அறிந்துகொண்டார்கள்.

கைஸ்:– ''லைலா! நீ என்னிடம் வந்திருக்கிறாய்; நான் உன்னைக் காதலிக்கிறேன்.''

லைலா:– ''நானும் தங்களைக் காதலிக்கிறேன்.''

இதன் பிறகு இவர்கள் பேசுவதற்கு ஒன்றுமிருக்கவில்லை. இருவரும் நன்கு கட்டித் தழுவிக் கொண்டார்கள். இவர்கள் ஆலிங்கனம் செய்து கொண்டதனால் விளைந்த ஆனந்தத்தை, இதற்கு முன் பல முறைகளில் இது போன்ற சம்பவங்களைக் கண்டிருந்த சந்திரனைத் தவிர வேறு எவரும் பார்க்கவில்லை. இவர்கள் இருவரும் என்ன சம்பாஷித்தார்கள் என்பதை—காதலர்



கள் என்ன இயம்புகின்றார்கள் என்பதை நீண்ட காலமாய் பதிவு செய்துவரும் நீரருவியைத் தவிர வேறு எவரும் கேட்கவில்லை.

இவ்வாறு லைலாவும், கைஸும் அடிக்கடி அநேக முறைகளில் இராப் பொழுதில் இங்கு கூடி உல்லாசமாய்க் காலம் கழித்திருக்கிறார்கள். உயிருக்கு ஹானிவரினும் ஒருவரை ஒருவர் மறப்பதில்லை என்று இவர்கள் பிரதிக்கினை செய்துகொண்டார்கள். ஒரு தினம் இவர்கள் விடைபெற்றுச் செல்லுகையில், '',ஓ எனது ஆறுயிரே! இப் பாலைவனம் எனது வீடாகவும், நீயும் நானும் சுயேச்சையும் சுதந்திரமும் உள்ளவர்களாகவும் இருப்போமாயின், இப் பொட்டல் நிலத்தில் முளைக்கும் புஷ்பங்களை புசித்தேனும் அல்லது காட்டில் முளைக்கும் தானியத்தைக் கொண்டு உன் கையால் சாதம் சமைத்தேனும் சாப்பிட்டுவிட்டு அதோ பாய்ந்துகொண்டிருக்கும் ஓடையில் நீர் பருகிவிட்டு, இதோ இருக்கும் மரக் கிளைகளின் கீழ் ஆறுதலாக ஜீவிக்க முடியுமானால் நான் உலகத்தையே மறந்து விடுவேன். உனது இனத்தவர்களிடம் எவ்விதப் பகையுமில்லாது நான் உன்னோடு உயிர் வாழ்ந்து உன்னையே எப்பொழுதும் காதலிப்பேன்'' என்று கைஸ் உருக்கமான தொனியில் கூறினான்.

RangaRakes
Tamilnavarasam.com

"நானும் இவ்வாறு வசிக்கத்தான் விரும்புகின்றேன் என் ஆருயிரே" என்று பதில் மொழிந்தாள் லைலா.

கைஸ்:– "அவ்வாறாயின் எல்லோரையும் மறந்து விட்டு இப்பொழுதுதே காட்டுக்கு ஓடிவிடுவோம்........." இதன் பிறகு சிறிது மௌனம் காணப்பட்டது. கைஸ் மேலும் பேசவாரம்பித்து "இப்பொழுதே போய்விடுவோமா?" என்று கேட்டான்.

லைலா:—"இல்லை; இப்பொழுதல்ல, நீங்கள் ஆயத்தங்கள் செய்துகொள்ள வேண்டும். எனது ஆருயிரே! நாளையத்தினம் இதே நேரத்தில் நான் இரண்டு குதிரை வரிசைகளுடன் தங்களுக்காகக் காத்திருப்பேன். இக் குதிரைகள் தங்கள் பாதங்களினால் தூசியை மிதித்து தள்ளுவது போன்று நாம் உலகத்தை உதறித் தள்ளுவோம். நாம் இருவரும் இணை பிரியாதிருப்போம்.

# 3

## காதலரைப் பிரித்துவைத்த காதகன் இப்னு ஸலாம்

தன் காதலனை விட்டுச்சென்ற லைலாவிற்கு ஆனந்தம் கரை புரண்டோடியது. தான் தன் எதிர்கால மணாளனுக்கு அளித்த வாக்குறுதியையும் அவனோடு செய்துகொண்ட ஆலிங்கனத்தின் அளப்பரிய ஆனந்தத்தையும் அவள் சதா சிந்தித்துக்கொண்டிருந்தாள். தன் மனதில் தோன்றிக் கொண்டிருந்த புதுப்புது எண்ணங்கள் தூக்கம் வருவதைத் தடுத்துக் கொண்டிருந்தன. வெகு நேரம் கட்டிலில் அங்குமிங்குமாகப் புரண்டு கொண்டிருந்தாள். சிறிது உறக்கம் வரும்பொழுதுகூடத் தனது காதலனைச் சந்தித்த சம்பவத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின; இந்த உல்லாச நினைவில் லைலா ஆழ்ந்த துயிலில் மூழ்கியிருந்தாள். தன்னுடைய அருமைக் காதலனுடன் ஒரு பாலைவன மரக்கிளையின் நிழலின் கீழ் அமர்ந்து, காட்டில் முளைக்கும் கோதுமையினால் தன் கையினாலேயே சமைத்த உணவைப் புசித்துவிட்டு அங்கு ஓடிக்கொண்டிருந்த ஓடையிலிருந்து நீர் பருகியதாகவும்

RangaRakes

Tamilnavarasam.com

மாடமாளிகைகளில் ஆடம்பரமாக வாழ்வதை விடத் தன் காதலனுடன் பாலைவனத்தில் காலங் கழிப்பது மிக்க மகிழ்ச்சியை அளிப்பதாகவும் லைலா கனாக்கண்டாள்.

அந்தோ பரிதாபம்! இக்கனவு எதிர்கால நிகழ்ச்சிகளுக்கும் எதிரிடையாக இருந்தது. ஆகவே. இது வெறும் மனோராஜ்யமாக முடிந்தது. இக்காதலர்களுக்கு எதிரியாக ஓர் வன்மை மிக்க விரோதி தோன்றிவிட்டான். இவன் தனது சூழ்ச்சித் திட்டத்தை மிக்க எச்சரிக்கையோடும் திறமையோடும் தயார் செய்திருந்தான். லைலாவின் மீது நீண்ட நாட்களாய்க் கண் வைத்திருந்த இவ்வெதிரி லைலாவுக்கும் கைஷுக்குமிடையில் ஏற்பட்டிருந்த சம்பந்தத்தை நன்றாக அறிந்திருந்தான். லைலாவும் கைஸும் என்ன செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கு இவன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆட்களை நியமித்திருந்தான். இவ்விருவரும் எதைச் செய்யினும் அது எதிரிக்கு அறிவிக்கப்பட்டுவிடும். லைலாவை எவ்வாறேனும் தன் மனைவியாகக் கொள்ள வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த இவனின் பெயர் இப்னு சலாம் என்பதாகும். இவனும் பஸராவைச் சேர்ந்த ஓர் அழகிய



வாலிபத் தலைவனாவான். லைலா காதல் நோயினால் வாட்டமுற்றிருப்பது இயற்கையாதலால் இதனை சாதகமாகக் கொண்டு ஓர் வைத்திய நிபுணன் வேஷத்தில் இவன் லைலாவின் தந்தையிடம் ஓர் ஆளனுப்பியிருந்தான். இவ் வைத்தியர் லைலாவைச் சிறிது காலத்துக்கு ஓர் குளிர்ப்பாங்கான எல்லைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று ஆலோசனை கூறினார். லைலாவின் கிழத்தந்தை லைலா சோர்ந்திருப்பதின் காரணத்தினால் இவ்வாலோசனையை ஏற்றுக்கொண்டு மறுதினமே லைலாவைத் தமது மலைப் பிரதேச விடுதிக்கு அழைத்துச்சென்றார். மலைப் பிரதேசத்தின் குளிர்ந்த சுத்தக் காற்றும் இயற்கை அமைப்பும் லைலாவுக்கு ஆரோக்கியத்தையும் சந்துஷ்டியையும் அளிக்குமென்று லைலாவின் தந்தை கூறினார். ஆனால், இவர் ஏன் திடீரென இவ்வித முடிவுக்கு வந்தார் என்பதை எவராலும் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் சிறிது காலமாக லைலா முகவாட்டமடைந்திருந்தாளே யாயினும் இப்பொழுது அவள் முகத்தில் சந்தோஷத்தின் பிரகாசம் காணப்பட்டது. தன் காதலனை மறுதினம் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்த லைலாவுக்கு இது பெருத்த ஏமாற்றமாக முடிந்தது. இப்னு ஸலா

RangaRakes

Tamilnavarasam.com

மின் முதல் முயற்சி பூரண வெற்றியாக முடிந்தது.

கைஸ் தன் ஆருயிர்க் காதலியைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரத்தில் வந்து காத்திருந்தான். பல தினங்கள்வரை லைலாவின் திடீர் பிரயானத்தைப்பற்றி இவன் எதையும் அறியாதது துரதிருஷ்டமானதாகும். கைஸின் ஏமாற்றத்தை நூறுமடங்கானதாகச் செய்வதற்கு இப்னுஸலாம் ஏற்பாடு செய்திருந்தான். பல நாட்களாகியும் லைலாவைக் காணாததால் கைஸ் பெருந் துக்கமடைந்திருந்தான். இச்சமயம் இப்னு ஸலாமின் தூதனொருவன் கைஸிடம் வந்து லைலா தன்னிஷ்டப் பிரகாரம் தன்னுடைய தந்தையின் குடும்பத்தோடு மலைப்பிரதேச விடுதிக்குச் சென்றிருப்பதாகவும் இவளின் அன்பிற்குப் பாத்திரமாகியுள்ள இப்னு ஸலாமும் கூடச் சென்றிருப்பதாகவும் அறிவித்தான். காதலர்கள் தங்களுக்கு இயற்கையாக ஏற்படும் மனக்கலக்கத்தினால் தாங்கள் கேட்பவைகளையெல்லாம் நம்பும் சுபாவமுடையவர்களாக இருக்கிறார்கள். கைஸ் இவ்வுண்மைக்குப் புறம்பானவனல்லவாகையால் இக்கூற்றைக் கேட்டவுடன் சுய அறிவை இழந்தவனேபோல் கதறிக்கொண்டு ஓடவாரம்பித்தான். தன் மனதில் உதயமான அவநம்பிக்கையினாலும் துக்க மேலீட்டினாலும் இவன் பாதிக்கப்பட்டிருந்தமையால் எவ்வாறேனும் தன் காதலியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர கைஸின் மனதில் வேறு எதுவும் செல்லவில்லை. "லைலா லைலா" என்று இடைவிடாது கதறிக்கொண்டு மலைப் பிரதேசத்தை நோக்கி ஓட்டமாகச் சென்றான். மலைப்பிரதேசத்தை அடைவதற்கு முன் ஓர் பெரும் பாலைவனத்தைக் கடக்க வேண்டியிருந்தது. கால்நடையாக இதைக் கடப்பதென்பது முற்றும் அசாத்தியமான காரியமாகும். ஆனால் லைலாவின் காதலினால் சுய அறிவைப் பறிகொடுத்திருந்த கைஸுக்கு இது அசாத்தியம்போலிருக்கவில்லை அன்று தினம் பூராவும் மறுதின இரவும் கைஸ், "லைலா, லைலா" வென்று இடைவிடாது அலறிக்கொண்டு பாலைவனத்தில் ஓடிக்கொண்டிருந்தான். பாலைவனத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலுமுள்ள கற்பாறைகளுக்கும், செடிகொடிகளுக்கும், மரங்களுக்கும், புதர்களுக்கும், மணற் குன்றுகளுக்கும் லைலாவென்ற பெயரை அறிவிக்கும் தோரணையில் கைஸ் கதறித் திரிந்தான். அந்தோ! பரிதாபம். எவ்வளவு நேரந்தான் ஊண், உறக்கமின்றி இவ்வாறு கதறித் திரிய முடியும்! மறுதினம் அதிகாலையில் கைஸ் பாலைவனத்தின் ஓர் மூலையில் களைத்துப்போய் மூர்ச்



RangaRakes
Tamilnavarasam.com

சையுற்று வீழ்ந்து கிடந்தான்.

கைஸின் நண்பர்களும் இவனிடம் மிக்க விசுவாசம் கொண்டிருந்த சேவகன் ஜைதும் அதிகாலையில் கைஸைக் கண்டெடுத்து வீட்டுக்குக் கொணர்ந்தார்கள். பசியினாலும், களைப்பினாலும் பிரக்ஞையற்றிருந்த கைஸ் பாலைவனத்தில் அலைந்து திரிந்ததேபோன்று சிந்தனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவனிடம் சுய அறிவு இருக்கவில்லை. இவனைச் சுவதீனமான நிலைமைக்குக் கொண்டு வருவதற்கு இவனது நண்பர்களும் உறவினரும் கடும் பிரயாசை எடுத்துக் கொண்டார்கள். இவன் மயக்கம் தெளிந்து சிறிது சுய அறிவைப் பெற்றவுடன் மீண்டும் "லைலா, லைலா" வென்று இடைவிடாது கதரவாரம்பித்தான். ஆகவே, கைஸ் தன்னறிவை இழந்துவிட்டான் என்று இவர்கள் கருதினார்கள். இத்தினத்திலிருந்து கைஸை எல்லோரும் "மஜ்னூன்" — காதலினால் பைத்தியங் கொண்டவன் — என்று அழைக்கலானார்கள். இதன்பிறகு இவனைக் கைஸ் என்பதற்குப் பதிலாக மஜ்னூன் என்றே எல்லோரும் அழைக்கலானார்கள்.

தன்னுடைய ஜன்ம சத்துருவான ஒரு தலைவனின் புதல்வியை நாடி மனம் குழம்புவதை



விட்டுவிடுமாறு மஜ்னூனின் தந்தை வெகுவாக வேண்டிக்கொண்டார். ஆனால் மஜ்னூன் எவ்வித நியாய வாதத்துக்கும் தலைசாய்ப்பதாயில்லை. தன் காதலைத்தவிர மற்றெல்லா விஷயங்களிலும் மஜ்னூன் நிதானமாய் நடந்து கொள்வதைக் கண்ட இவனின் தந்தை "இக் காதல் விஷயத்தில் நான் எனது அருமை மைந்தனுக்கு திருப்தியளிக்கக்கூடுமாயின் மீண்டும் இவன் பூரண மனிதனாக மாறி விடுவான்" என்று தமக்குள்ளேயே கூறிக்கொண்டார். பிறகு இவர் தமக்கும் பஸராவின் தலைவருக்குமிடையில் இருந்துவந்த பகைமையை நீக்குவதோடு ஓர் புதிய பாந்தவ்வியத்தையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டுமென்று தீர்மானித்தார், ஆகவே, இவர் தமது மைந்தன் மஜ்னூனைத் தம் விசுவாசமுள்ள சேவகன் ஜெய்திடம் ஒப்படைத்துவிட்டு, தம்முடைய பரிவாரங்களோடு மிக்க ஆடம்பரத்துடன் தம் எதிரியாகிய பஸராவின் தலைவரை நேரில் சந்திக்கச் சென்றார்.

பல நாட்கள் பிரயாணம் செய்தபிறகு இவர் லைலாவின் தந்தையினுடைய மலைப்பிரதேச வாசஸ்தலத்தை அடைந்தார். இவருக்கு விசேஷ உபசரனை எதுவும் அளிக்கப்படவில்லையாயினும்

RangaRakes
Tamilnavarasam.com

லைலாவின் தந்தை இவரை அவமரியாதையாக நடத்தவில்லை. அராபியர்கள் அனைவரிடமும் பொதுவாக இருந்துவரும் விருந்தோம்பும் குணம் லைலாவின் தந்தையினிடம் நிறைய இருந்தது. ஆனால் இவர் சிறிது முரட்டு சுபாவம் கொண்டவராக இருந்தார். மஜ்னூனின் தந்தை வேறு எவ்விஷயத்தையும் பற்றிப் பேசாது தமது அருமைத் தனயனுக்கு லைலாவைப் பாணிக்கிரணம் செய்து வைப்பதற்கு சம்மதிக்க வேண்டுமென்று தமக்குரிய இறுமாப்பான தொனியில் கோரி நின்றார். இக்கோரிக்கைக்குச் சம்மதிப்பதால் தங்கள் இருவருடைய குடும்பங்களிடையேயும் இருந்துவரும் பகைமை நீங்கிப் புதிய அன்னியோன்னிய உறவேற்படுமென்பதையும் இக்கோரிக்கைக்குக் காது தாழ்த்தப்படவில்லையாயின் இருவரும் கொடிய யுத்தத்தில் இறங்கவேண்டி ஏற்படுமென்பதையும் இவர் தெளிவாக எடுத்துரைத்தார். இக்கோரிக்கை எவ்வளவு அகந்தையுடன் செய்யப்பட்டதோ அவ்வளவு அகந்தையுடன் நிராகரிக்கப்பட்டது. "நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்தி வெகுதூரம் பிரயாணம் செய்கிறது; உம்முடைய மைந்தன் பைத்தியம் கொண்டிருக்கிறான்; முதலில் அவனைச் சொஸ்தம் செய்துவிட்டுப் பிறகு என் சம்மதத்தை நாடுவீராக" என்று லைலாவின் தந்தை கூறினார். இக்கூற்று மஜ்னூனின் தந்தைக்குக் கோபத்தையும் ஏமாற்றத்தையும் உண்டுபண்ணியது.

# 4

## பஸராமீது எமனின் யுத்தப் பிரகடனம்

கைஸின் தந்தை மிக்க பெருமையும் ஆக்ரோஷமும் உடையவர். இதற்கேற்ப இவர் சிறந்த யுத்தவீரராகவும் பராக்கிரமசாலியாகவும் இருந்தார். லைலாவின் தந்தை தமக்களித்த பதில் தமக்கு அவமரியாதை செய்வதாகும் என்று இவர் கருதலானார். இவ்வித அவமானத்தை இவரால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. பஸராவுக்கும், எமனுக்கு மிடையிலுள்ள பகைமை நீங்கி அந்நியோந்நிய உறவேற்படுவதற்கும், லைலாவைத் தன் மைந்தனுக்கு மனைவியாகச் செய்வதற்கும் இவர் மனப்பூர்வமான முயற்சி செய்தார். நல்ல நோக்கத்தோடு இவர் நீட்டிய சிநேகப் பான்மையான கை யுத்தத்தில் மாட்டி வைக்கப்பட்டது. தமது கண்களில் கோபத் தணல் பறக்கும் தோரணையில் இவர் ஒருவித திடசித்தம் கொண்டவராய் தம்முடைய பரிவாரங்களோடு பஸராவைவிட்டு வெளியேறினார். பஸராவின் வானத்தில் யுத்த மேகங்கள் குழுமின; இடிகள் முழங்கின. பஸராவின்மீது பழி தீர்த்துக்கொள்வதற்காகப் படையெடுத்

RangaRakes
Tamilnavarasam.com

துச் செல்லவேண்டுமென்ற நோக்கத்தோடு இவர் தமது மாளிகைக்குத் திரும்பினார்.

ஆயினும், கைஸின் தந்தை யுத்த ஏற்பாடுகள் செய்வதைச் சிறிது காலத்துக்கு ஒத்திப்போட வேண்டியதாயிற்று. இவர் திரும்பி வருகையில் தம் மாளிகையில் கைஸ் இருக்கவில்லை. ஜைத், கைஸை மக்காவுக்கு ஹஜ் செய்வதற்காக அழைத்துச் சென்று இருப்பதாகப் பிறகு கேள்வியுற்றார். ஹஜ்ஜின் கடமைகளை நிறைவேற்றிவிட்டு ஸம்ஸம் கிணற்றில் நீர் பருகுவதன்மூலம் கைஸின் துன்பங்கள் அகன்றுவிடுமென்று ஜைத் நினைத்தான் போலும்.

"ஹாஜராவையும் இம்மாதரசியின் புதல்வரையும் காப்பாற்றுவதற்காக வரண்ட பாலைவனத்திலிருந்து கிளம்பிய அப் பரிசுத்த கிணற்றின் நீர் எனது புதல்வனின் மனக் கோளாறை நிச்சயமாகக் குணப்படுத்துமென்று நினைக்கிறேன். நானும் அதனைத் தொடர்ந்து சென்று இப்பரிசுத்த ஆலயத்தில் சிரஞ்சாய்த்து வணங்குவேன்; நானும் அப் பரிசுத்த கிணற்றிலிருந்து நீர் அருந்துவேன். ஆகவே, ஒரு வேளை எனது அருமை மைந்தன் பூரண சுகத்தை அடைந்துவிடுதல் கூடும்" என்று கைஸின் தந்தை தமக்குள்ளேயே கூறியவாறு கஃபாவுக்குப் பரிசுத்த யாத்திரை செய்யப் புறப்பட்டார்.



பல சமயங்களில் நாம் நினைத்தவாறு நிகழ்வதில்லை இப்பொழுது கைஸின் தந்தை நினைத்ததற்கு நேர் முரணாகக் காரியம் நடப்பதை நாம் காண்கின்றோம். இவர் மக்கமாநகரை அடைவதற்கு இன்னும் இரண்டுதினப் பிரயாணம்தான் பாக்கியிருந்தது. இவர் தமது திரளான பரிவாரங்களோடு சென்றுகொண்டிருக்கையில் அப்பாலைவனப் பிரதேசத்திற்கு அரசராக இருந்துவந்த நௌபல் என்பார் இவரை வந்து சந்தித்தார். கைஸின் தந்தை வருவதை ஏற்கனவே கேள்வியுற்றிருந்த நௌபல், பாலைவனப் புலிகளை போன்ற தமது போர் வீரர்கள் புடைசூழ வாயு வேகமாக அத்திறந்த வெளியில் அரபிக் குதிரைகளின்மீது அமர்ந்து வந்துகொண்டிருந்ததனால் அலை அலையாகப் புழுதி கிளம்பிக் கொண்டிருந்ததைக் கண்ட கைஸின் தந்தை எதிரிகள் வருவதாக நினைத்துப் போருக்கு ஆயத்தமானார். ஆனால் இவர்களுக்குத் தலைமை வகித்துவந்த நௌபல் முகமன் கூறியது கைஸின் தந்தைக்கு வியப்பாக இருந்தது. இவர் சிநேக முறையில் சந்திக்க வந்திருக்கிறார் என்பதை இவர் சடுதியில் விளங்கிக் கொண்டார்.

பாலைவனத்தில் வெகு விரைவாகப் பிரயாணஞ்செய்த நௌபல் தமது அழகிய



RangaRakes

Tamilnavarasam.com

திடகாத்திரமுள்ள குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துத் திடீரென நிறுத்தினாராதலின் அங்கிருந்த மணலும் கூழான் கற்களும் வெகு தூரம்வரை எறியப்பட்டன.

நௌபல்:- ''உங்களை நான் அறிவேன்; தாங்கள் தான் எமனின் தலைவர். இப்பாலைவனத்தில் நான் சந்தித்த மஜ்னூனின் தந்தையல்லவா நீங்கள்? உங்களுக்கு நான் வாழ்த்துக் கூறுகின்றேன். இறக்கும் தறுவாயில் துன்புற்றுக்கொண்டிருந்த தங்கள் புதல்வனுக்கு நான் உதவி புரிந்திருக்கிறேன். நான் இவ்வாலிபரின் கதையைக் கேட்டுள்ளேன். ஓ! எமனின் வள்ளலே! நீங்கள் விரும்புவீர்களாயின் நான் உங்களுக்கும் மஜ்னூனுக்கும் உதவியாக நின்று பஸராவின் தலைவருக்கு எதிராகப் போர் புரிவேன். அப்பழுக்கற்ற மனதையுடைய இவ் வழகிய வாலிபரின் பரிதாபகரமான நிலையைக்கண்டு எனதுள்ளம் துயரடைகின்றது. காதல் பீடையால் கரைந்துருகும் உமது அருமை மைந்தரைக் காப்பாற்றுவதற்கு நாம் திடசித்தமான நடவடிக்கை ஏதாவது எடுத்துத்தான் ஆகவேண்டும்''

கைஸின் தந்தை:- ''ஓ நௌபல்! உமக்கு நான் வாழ்த்துக் கூறுகின்றேன். தங்களுடைய பெயரை நான் அறிந்திருக்கிறேன். தாங்கள் இப்பாலைவனத்தைச் சார்ந்தவர். தங்களுடைய



வீரப் பிரதாபங்களையும் தாராளச் செய்கைகளையும் நான் கேள்வியுற்றிருக்கிறேன். என் மைந்தனைத் தாங்கள் தங்கள் விடுதியில் வைத்திருப்பதாகக் கூறுகின்றீர்களா? பரிசுத்த யாத்திரைக்காகப் புறப்பட்டுச் சென்ற என் புதல்வன் எவ்வாறு தன் கடமையை மறந்துவிட்டான் என்பதை என்னால் அறிய முடியவில்லை. இப் புனித ஆலயத்தில் நான் அவனைச் சந்திக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே புறப்பட்டு வந்திருக்கிறேன்.''

நௌபல்:- ''ஐயோ பரிதாபம்! இப்பாதையில் இவன் மூர்ச்சையுற்று வீழ்வதை எனது வீரர்கள் கண்டார்கள். இவ்வீரர்கள் இவனருகே வந்தபொழுது இவன் 'லைலா! லைலா!' வென்று புலம்பிக் கொண்டிருந்தான். எனது வீரர்கள் இவனை என் இல்லத்திற்குக் கொணர்ந்தார்கள். அவன் இடைவிடாது இயம்பிவரும் 'லைலா! லைலா!' என்ற தொனியினாலும் நான் கேள்வியுற்ற இவனின் அரை குறையான கதையினாலும் இவன் தங்களுடைய மைந்தன் மஜ்னூன் என்பதை அறிந்து கொண்டேன். ஓ எமனின் தலைவரே! காதலையும் அழகையும் பற்றிய கதை இப்பாலைவனத்தில் வெகு தூரம்வரை பிரயாணம் செய்கிறது.''

RangaRakes
Tamilnavarasam.com

கைஸின் தந்தை:- "நௌபல்! அவ்வாறாயின் நீர் என்ன ஆலோசனை கூறுகின்றீர்?"

நௌபல்:-தங்களுடைய புதல்வரின் நன்மைக்காக, நானும் நீங்களும் பஸராவின் தலைவரிடம் நேரில் சென்று லைலாவைக் கைஸுக்கு மணம் செய்துவைக்கச் சம்மதிக்குமாறு ஓர் கண்டிப்பான வேண்டுகோளை இவரிடம் சமர்ப்பிப்போம். இதற்கு இவர் சம்மதிக்கவில்லையாயின் நாம் வீரம் செறிந்த வாள்முனையினால் பஸராவை வெற்றிகொள்வோம். இப்பாலைவனத்திலும் இதற்கு அப்பாலும்கூட நான் தங்களுடைய நன்மைக்காகப் போரிடுவேன். நமது கோரிக்கைக்கு இவர் இணங்குவாராயின், நானும் தாங்களும் இவருடன் சிநேகப்பான்மையில் சமாதானமாக வாழ்வோம். இவ்வித நிலைமை ஏற்படுமாயின் தங்களிஷ்டப் பிரகாரம் நாம் ஆளும் பிரதேசங்களைச் சிநேகக் கயிற்றினால் பிணைத்து வைக்கலாம். இதற்குமேல் நிபந்தனைகள் ஏதுமில்லை"

கைஸின் தந்தை:- "ஓ நௌபல்! உமது அன்பிற்காகவும் என்மீதும் எனது மைந்தன் மீதும் நீர் செலுத்தும் அனுதாபத்திற்காகவும் நான் என்ன கைம்மாறு செய்தல் சாலும்! நான் உம்மைப் பூரணமாக நம்புவதோடு நான்



உமது ஆலோசனையையும் ஏற்றுக் கொள்கின்றேன். நீர் இப்பொழுது எனது தூதராக பஸராவின் தலைவரிடம் சென்று லைலாவை என் புதல்வனுக்கு விவாகம் செய்து வைப்பதற்குச் சம்மதிக்கவேண்டும் என்ற நமது கண்டிப்பான கோரிக்கையை அவரிடம் சமர்ப்பியும். இக்கோரிக்கைக்கு இவர் இணங்கவில்லையாயின் நாம் பஸராமீது யுத்தம் தொடுப்பது நிச்சயம் என்று இறுதி எச்சரிக்கை செய்யும். நான் உம்மைத் தொடர்ந்து வருவேன். அவர் லைலாவை நமக்கு அளிக்கச் சம்மதிக்கிறார் என்ற நற்செய்தியோடு நீர் திரும்புவீராயின் எல்லாம் சுமுகமாக முடியும்; நாம் அன்போடும் ஆசியோடும் நீட்டும் சிநேகக் கரத்தை இவர் உதறித்தள்ளி விடுவாராயின் உமது ஆலோசனைக்கு ஏற்ப நாம் பஸராமீது யுத்தம் தொடுப்போம். நீர் திரும்புகையிலேயே யுத்தப் பிரகரடனம் செய்துவிடலாம். நான் எவ்வித நிபந்தனையும் விதிக்க விரும்பவில்லை. உம்முடைய விருப்பம்போல் நிபந்தனைகள் செய்துகொள்ளலாம். இதற்குமேல் எடுக்கவேண்டியுள்ள நடவடிக்கைகளுக்குத் தூது செல்வதற்கு உம்மிடமும் எம்மிடமும் விரைந்து செல்லத்தக்க குதிரைவீரர்கள் இருக்கிறார்கள்"

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் நௌபல் தமது குதிரையைத் தட்டிவிட்டார். நௌபல் பாலைவனத்தில் தோன்றிய பாராட்டத்தக்க

RangaRakes

Tamilnavarasam.com

தளபதியாகவும் யுத்த வீரராகவும் இருந்தது போன்று இவரின் குதிரையும் சமயத்திற்கு ஏற்றவாறு கடமையாற்றுவதற்குக் கற்றிருந்தது. நௌபல் தமது குதிரையை இயக்கியவுடன் அது வேகமாகச் சென்று ஆங்கிருந்த மணற் குன்றின்மீது ஏறி நின்றது. இங்கு நௌபல் தமது குதிரையின்மீது அமர்ந்தவாறு தமது வீரர்களில் சிலருக்கு ஏதோ கட்டளை விடுத்தார். உடனே ஆறு படைகள் பாலைவனத்தின் நாலுபக்கங்களுக்கும் சென்று ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைன்னியங்கள் ஓர் குறித்த இடத்தில் கூட வேண்டுமென்ற உத்தரவை அறிவித்தன. இதே சமயத்தில் கைஸின் தந்தையும் எமனிலுள்ள தமது சைன்னியங்களுக்கு அவசரக் கட்டளைகள் அனுப்பிவைத்தார். பிறகு நௌபல் ஓர் பலம் பொருந்திய குதிரைப் படையுடன் பஸராவை நோக்கிப் பிரயாணமானார். தாம் எமனுக்கு அனுப்பிய தூதர்கள் திரும்பி வரும்வரை கைஸின் தந்தை காத்திருந்தார்.

# 5

## சடுதியில் தோன்றிய யுத்த மேகமும் விடுதியினுள் வருந்திய வனிதையும்

ஒருபக்கம் யுத்த முரசு கொட்டப்படுகின்றது. மறுபக்கம் லைலா மலைப்பிரதேச மாளிகையில் பெருந் துன்பத்துக்கும், துயரத்துக்கும் இலக்காகி இருந்தாள். லைலாவின் தந்தையினுடைய மனதை முற்றும் கவர்ந்திருந்த இப்னு ஸலாம் இவ்வணங்கைத் தனக்கு விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று இடைவிடாது வற்புறுத்தி வந்தான். லைலாவின் தந்தையும் தன்னுடைய புதல்வியிடம் இவ் விஷயத்தை அடிக்கடி கூறி இவளின் சம்மதத்தைப் பெறுவதற்கு முயன்று வந்தார். ஆனால் லைலா இவ்வாலோசனைக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வந்தாள். லைலாவின் கண்ணீரும், கம்பலையும் இவளின் முரட்டு சுபாவங்கொண்ட தந்தையின் மனதைக்கூட உருகச் செய்துவிட்டன. ஆகவே இவர் இப்னுஸலாமை நோக்கி ''அவள் இன்னும் போதிய வயதை அடைந்து விடவில்லை; இன்னும் சிறிது காலத்துக்குப் பொறுத்துக் கொள்ளுங்கள். காலம் செல்லச் செல்ல முட்டுக் கட்டைகளும் நீங்கிவிடும்'' என்று கூறலானார்.

RangaRakes

Tamilnavarasam.com

இப்னு ஸலாம் லைலாவின்மீது கண் வைத்திருந்ததே போல் லைலாவின் தந்தை இவ்வழகிய வாலிபத் தலைவனிடம் கண் வைத்திருந்தார். ஏனெனில் இவ்வாலிபன் மிக்க செல்வம் பொருந்திய பிராந்தியங்களைத் தன்னுடைய கையின் கீழ் வைத்திருந்தான். மேலும் ஆயிரக்கணக்கான யுத்த வீரர்களைக்கொண்ட பல படைப் பிரிவுகளையும் வைத்திருந்தான். இத்தோடு இவன் கவர்ச்சியை அளிக்கும் ஆஜானுபாகுவாகவும் இருந்தான். ஆனால் தன்னுடைய அருமைப் புதல்வி விரும்பாத ஒருவனை இவளுக்கு வரனாக வரச் செய்வதனால் இவளின்வாழ்க்கையே பாழாகிவிடும் என்பதை இவர் சிறிதும் லட்சியம் செய்தாரில்லை. லைலா சரியாக உணவு உட்கொள்ளாமலும் வெளியிடங்களுக்குச் செல்லாமலும் உலக வாழ்க்கையிலேயே வெறுப்புக் கொண்டிருந்தாள் என்பதை இவர் அறியாதிருந்தது துரதிர்ஷ்டவசமானதாகும். லைலா தனது தந்தையின் மாளிகையில் இரவையும் பகலையும் கழித்துவந்தாளேயன்றி தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்பதை அறியாதிருந்து வந்தாள். இராக் காலங்களில் காட்சியளிக்கும் நக்ஷத்திரங்களும் வான வெளியில் சஞ்சரிக்கும் மேகக் கூட்டங்களும் தான் இவளின் கவனத்தை ஈர்த்திருந்தன. ''எவரையும் விவாகம் செய்து



கொள்வதைவிட நான் ஓர் கன்னிப் பெண்ணாகவே மரணமடைவேன்; அந்தோ பரிதாபம்! மஜ்னூன் என்னைவிட அதிசயமாகவே தனது தேக சுகத்தையும், சந்துஷ்டியையும் இழந்துவிட்டான்'' என்று இரவு வேளைகளில் நக்ஷத்திரங்களை நோக்கியவாறு லைலா தனக்குள்ளேயே கூறிக்கொள்வாள்.

வாழ்க்கையில் எவ்வித சுவையுமற்றிருந்த லைலாவுக்கு தன் வெண் புறாக்கள் பெரிதும் ஆறுதலை அளித்துவந்தன. இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. இருப்பிடம் மாறியதன் பயனாய் தன் அருமைப் புறாக்களோடு விளையாடும் பாக்கியத்தைக் கூட இவள் இழந்து விட்டாள். ''அப்பாலுள்ள மரத்தில்'' தன் புறாக்கள் பத்திரமாக இருக்கட்டுமென்று கருதி லைலா இவைகளை தன் மாளிகைச் சேவகர்களின் கண்காணிப்பில் விட்டுவந்திருந்தாள். அம்மரத்தில் இப்பறவைகள் உல்லாசமாக விளையாடினவேயன்றி தூரப்பிரதேசம் சென்றிருந்த தன் எஜமானியின் துயரை அறியவில்லை. இப்பறவைகளில் ஒன்று தன் அருமைக் காதலனிடமிருந்து நிருபம் கொணர்ந்ததிலிருந்து இவைகள் மீது லைலா மிக்க அக்கரையும் அன்பும் செலுத்திவந்தாள். இவைகளை யாரேனும் தன்னிடம் கொணர்ந்து சேர்ப்பார்களா


Tamilnavarasam.com

வென்று யோசித்துக்கொண்டிருக்கையில் அம்மலைப் பிரதேச விடுதியின் ஓர் மூலையில் கட்டப்பட்டிருந்த புலி உறுமியது இவளின் கவனத்தை ஈர்த்தது. தன்னை வளர்த்துவரும் அபிஸீனிய அடிமைச் சேவகனுக்கல்லாது வேறு எவருக்கும் பணியாதிருந்துவந்த இப் புலியினால் புறாக்களைப் போன்று காதல் பாஷை பேசவோ அல்லது வேறுவித வேடிக்கையை அளிக்கவோ முடியாதிருந்தது. அதிர்ஷ்டவசமாக லைலாவுக்கு ஓர் கிளி கிடைத்தது. லைலாவின் அடிமைப் பெண் ஒருத்தி ஒரு தினம் இப்பறவையைத் தனது எஜமானிக்குத் தந்துவிட்டு "என்னைக் காதலிக்கும் எனது சிநேகிதன் இதை பக்கத்திலிருக்கும் காட்டில் வைத்துப் பிடித்துவந்தான்; என்னிடம் தாங்கள் கொண்டுள்ள அன்பிற்காக இதை உங்களுக்கு அளிக்குமாறு வேண்டிக்கொண்டான்" என்று கூறினாள்.

இப்பறவை தனக்குக் கிடைத்தது ஒரு பெரும் பாக்கியமென்று ஏகாந்த வாழ்க்கையிலிருந்து வந்த லைலா நினைத்தாள். தான் பேசும் வார்த்தைகளைக் கேட்டு இவைகளை இக்கிளி உச்சரிக்க முனைவதைக் கண்டு லைலா சந்தோஷம் கொண்டாள். இக்கிளிக்கு லைலா ஒரேயொரு வார்த்தையை நன்றாகக் கற்றுக் கொடுத்தாள். 'மஜ்னூன்' என்பதுதான் இவ்வார்த்தையாகும்.



இவ்வார்த்தையை லைலாவின் கிளி நன்றாக உச்சரிக்கவாரம்பித்தது. லைலா இப்பறவையைத் தன் கரத்தில் அமரச் செய்துவிட்டு அது இடைவிடாது 'மஜ்னூன் மஜ்னூன்' என்று கூறிக்கொண்டிருப்பதை மணிக்கணக்கில் கேட்டுக்கொண்டிருப்பாள். லைலாவின் தோளில் உட்கார்ந்துகொண்டு மிருதுத் தொனியில் இவ்வினிமையான வார்த்தையை இப்பறவை மீண்டும் மீண்டும் 'மஜ்னூன் மஜ்னூன் மஜ்னூன்' என்று பல்லாயிரக்கணக்கான முறைகளில் பகர்ந்துகொண்டே இருக்கும். லைலாவின் உலக இன்பமெல்லாம் இவ்வார்த்தையில்தான் பொதிந்திருந்தன. இதைக் கேட்டுக்கொண்டிருக்கையில் லைலாவின் இதயம் இவளின் மார்பை விட்டு அகன்று மஜ்னூனைக் கண்டுபிடிப்பதற்காகப் பாலைவனத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஓய்வின்றி அலைந்து திரியும்.

ஒரு தினம் மாலை வேளையில் லைலா இவ்வாறு தனது இருதயத்தைப் பாலைவனமெல்லாம் அலைந்து திரிய விட்டிருக்கையில் நௌபல் தன்னுடைய யுத்த வீரர்கள் புடைசூழ இவளின் மாளிகையின் முன் கோஷமிட்டுக் கொண்டிருந்தார். "இப்பொழுதே நான் லைலாவின் தந்தையைக் காணவேண்டும்; அவர் வெளிவராதிருப்பாராயின் நான் இவ் வெளிவாசலைத்

RangaRakes

Tamilnavarasam.com

தகர்த்துக்கொண்டு உள்ளே செல்வேன்'' என்று கூறிக்கொண்டு நௌபல் பளபளவென மினுங்கிக் கொண்டிருந்த தமது வாளைச் சுழற்றினார். லைலாவின் தந்தை பரபரப்போடு வெளியில் வந்தார்.

மாலைப் பொழுதின் சூரியன் பிரகாசம் பொருந்திய தனது நானாவிதக் கதிர்களை வீசி அம்மலைப் பிராந்தியம் பூராவையும் பொன்னிறமாகச் செய்துகொண்டிருக்கையில் நௌபலும் லைலாவின் தந்தையும் ஒருவருக்கொருவர் தீப்பொறி பறப்பதே போன்ற, காரசாரம் பொருந்திய கடுமையான சொற்பிரயோகங்களை மாறி மாறி உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வார்த்தைப் போர் சிறிது நேரம்தான் நீடித்திருந்தது. இவர்களை விட்டுப் பிரியும் தறுவாயிலிருந்த கதிரவன் மேலும் சிறிது தாழ்ந்து தன் சாளரத்தில் நின்று உற்றுநோக்கிக் கொண்டிருந்த லைலாவின் வாடிய முகத்தைப் பிரகாசிக்கச் செய்ய எத்தனிக்கையில் இவர்களின் கோபாக்கினியைக் கக்கும் சம்பாஷணையும் முடிவுற்றது. இதன் பிறகு ஒரு க்ஷண நேரமேனும் அங்கு சுணங்காது நௌபல் தனது குதிரை வீரர்களோடு பஸராவை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த கைஸின் தந்தையினுடைய படைகளைச் சந்திப்பதற்காகப் பாய்ந்து சென்றார்.



தொடு வானத்தைத் தொட்டுக் கொண்டிருந்த சூரியனுக்கும் தனக்குமிடையிலுள்ள பாலைவன வெளியில் குதிரைகள் விரைந்து செல்கையில் இவைகளின் குளம்புகளினால் கிளப்பப்பட்ட புழுதிப் படலங்களை லைலாவின் தந்தை பிரமிப்போடு பார்த்துக்கொண்டிருந்தார். இப்புழுதி அலைகளினூடே சடுதியில் ஒரு திடீர் யுத்தம் தோன்றப் போகிறதென்பதை இவர் உணர்ந்து கொண்டார்.

இப்னு ஸலாமின் ராஜ்யம் லைலாவின் தந்தையினுடைய மலைப் பிரதேசத்தை அடுத்திருந்தது. லைலாவைத் தனக்கு விவாகம் செய்து வைக்கப் போவதாகக் கூறியதை ஒட்டி நௌபல் போர்க்கோலம் பூண்டு சென்றிருப்பதையும் உடனடியாக யுத்தம் தோன்றப் போகிறதென்பதையும் அறிந்த இப்னு ஸலாம் லைலாவின் தந்தைக்கு ஆயிரம் யுத்த வீரர்களைக் கொண்ட ஓர் படையைக் கொடுப்பதற்கு முன்வந்தான். லைலாவின் தந்தை இப்படையை ஆவலோடு ஏற்றுக்கொண்டார். ஆனால் இப்னு ஸலாமிடம் மேலும் சில ஆயிரம் யுத்த வீரர்கள் இருந்தார்கள். அன்று இராப்பொழுது பூராவும் மலைப் பிரதேச மாளிகையைச் சுற்றி யுத்த ஏற்பாடுகள் பரபரப்போடு செய்யப்பட்டு வந்தன. மறுதினம் மதியத்துக்கு முன் பெருவாரியான துருப்

RangaRakes

Tamilnavarasam.com

புகள் அங்கு குழுமியிருந்தன. இவைகளோடு இப்னு ஸலாமின் துருப்புகளும் வந்து சேர்ந்து கொள்வதைக் கண்ட லைலாவின் மனம் திடுக்கிட்டது. பலவிடங்களிலும் யுத்த வீரர்கள் திரண்டுகொண்டிருப்பதை லைலா ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள். லைலாவின் கண் பார்வை எட்டும் தூரம்வரை பாலைவனத்தை ஊடுருவிக் கொண்டிருந்தது. வெகுதூரத்தில் ஒரு பெரும் படை வரும் வேகத்தினால் கிளப்பப்படும் அலை அலையான தூசி மேகங்கள் பரவுவதையும் லைலா கண்டாள். ஆனால் கூண்டில் அடைக்கப்பட்ட பறவையே போன்று எதுவும் செய்யச் சக்தியற்றவளாய் தனது விடுதியினுள் வருந்திக் கொண்டிருந்தாள் இவ்வனிதை. ''ஐயோ! என்னுடைய நெஞ்சத்தில் துடித்துக் கொண்டிருக்கும் இருதயம்தான் இதற்குக் காரணமாக இருக்கிறது; நான் எனது தந்தையிடம் பக்ஷம் பாராட்டுகின்றேன். நான் எனது மஜ்னூனைக் காதலிக்கின்றேன். தலைவிதிதான் இவர்களில் ஒருவர் பக்கம் என்னைச் சாய்த்து வைக்க வேண்டும்'' என்று லைலா பிரலாபிக்கலானாள்.

# 6

## பஸராவின் படுதோல்வி

தலைவிதிதான் தன்னுடைய நிலைமையை நிர்ணயிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த லைலாவின் உள்ளம் உறுதியற்ற நிலையிலிருந்தது. தலைவிதி எண்ணிலடங்கா ஏமாற்றங்களையும் சகிக்கவொண்ணாத அதிர்ச்சிகளையும் கொணர்கிறதென்பதையும் அறிந்து கொள்வதற்கு இவ்வணங்கு போதிய அனுபவம் பெற்றிருக்கவில்லை. ஒரு பக்கத்தில் மஜ்னூனின் தந்தையுடையவும் நௌபலுடையவும் படைகளுக்கும், மறுபக்கத்தில் தனது தந்தையின் துருப்புகளுக்கும் இப்னு ஸலாமுடைய துருப்புகளுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருந்த கோர யுத்தத்தினால் கிளப்பப்பட்ட ஓசை லைலாவின் காதைச் செவிடுபடச் செய்வதாக இருந்தது. குதிரைகளின் மீதும் ஒட்டகங்களின் மீதும் இருந்துகொண்டு யுத்த வீரர்கள் ஒரு பகுதியினரை மறுபகுதியினர் ஆவேசமாகத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். வீராவேசத்துடன் போராடிக் கொண்டிருந்த சிப்பாய்கள் தங்களுடைய குதிரைகளிலிருந்தும் ஒட்டகைகளிலிருந்தும் மடிந்து வீழ்ந்து கொண்டிருந்தார்கள்.

RangaRakes Tamilnavarasam.com

தவறிய அம்புகளுக்கு இலக்கான குதிரைகளும் ஒட்டகைகளும் கதறிக்கொண்டு மண்மீது சாய்ந்து வீழ்ந்தன. மாலைப்பொழுதும் மறைந்து இராப்பொழுது அண்மித்துக் கொண்டிருந்தது. லைலாவின் மனம் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்குமிடையில் தத்தளித்துக் கொண்டிருக்கையில் இப்னு ஸலாமின் படைகள் சீர்குலைந்து ஓடுவதை இவள் கண்டாள். உறுதியோடு போரிடும் நௌபலுடையவும் மஜ்னூனின் தந்தையினுடையவும் படைகளுக்கு முன் தன்னுடைய தந்தையுடையவும் இப்னு ஸலாமுடையவும் படைகள் நின்று பிடிக்க முடியாது சீர்குலைந்து ஓடுகின்றனர் என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது. சிதைந்து கலைந்து போயிருந்த இவ்விரு படைகளும் மற்றோர் முறையும் தங்களை ஒன்றுசேர்த்துக் கொண்டு போர்புரிந்தனர். ஆனால் சிறிது போழ்தைக்குள் இவர்களுள் பெரும்பாலோர் உயிர் நீத்தனர். மீதியிருந்தவர்கள் ஓட்டம்பிடித்தார்கள். பின்வாங்கிய இவர்கள் லைலா இருக்கும் மாளிகையின் எல்லைக்குள் பிரவேசித்து வெளி வாயிலைத் தாளிட்டுக் கொண்டார்கள். வெற்றி முழக்கம் செய்து கொண்டு முன்னேறிய படைகள் இவ்வாயிலைத் தகர்த்துக்கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள். ஆகவே இந்த யுத்தத்தில் பஸரா படுதோல்வி



யடைந்தது. சரணாகதி நிபந்தனைகளை அறிவிப்பதற்காக மஜ்னூனின் தந்தை ஒரு தூதுகோஷ்டியை அனுப்பிவைத்தார். என்ன சம்பாஷணை நடைபெறுகிறதென்பதைக் கேட்பதற்காக லைலா தான் நின்றுகொண்டிருந்த சாளரத்துக்கு வெளியே தலையை நீட்டினாள். சிறிது நேரமாக எதுவும் கேட்கவில்லை. ஆனால் திடீரெனத் தனது தந்தை தோல்வியைக் கூடப் பொருட்படுத்தாது துணிச்சலான தொணியில் பேசவாரம்பித்த "நான் எனது புதல்வியை உங்களிடம் ஒப்படைக்கவில்லையாயின் நீங்கள் அவளை எடுத்துச் செல்லப் போவதாகவா கூறுகின்றீர்கள்? அவ்வாறு செய்யக் கூடுமேயாயினும் அவளை நீங்கள் உயிரோடு கொண்டு செல்ல மாட்டீர்கள். நான் இப்பொழுது எனது கரத்தை உயர்த்திச் சைக்கினை செய்வேனாயின் அவள் உடனேயே கொல்லப்பட்டு விடுவாள். நான் பூரணமாகத் தோல்வியடைந்திருப்பது உண்மையே. ஆனால் இன்னும் எனது சேவகர்கள் எனது வார்த்தைக்கு மரியாதை செய்கிறார்கள். நான் உத்தரவு பிறப்பிப்பேனாயின் அவள் உயிர் இழந்த பிண்டமாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் இஷ்டப்பட்டால் அப்பொழுது



RangaRakes

Tamilnavarasam.com

அவளை எடுத்துச் செல்லலாம்'' என்று தீர்மான மாகக் கூறி முடிப்பதைக் கேட்டாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மஜ்னூனின் தந்தை பெரிதும் கலக்கமடைந்துவிட்டார். இப் படிப்பட்ட குரூரச் செயல் ஏதும் புரிந்துவிட வேண்டாம் என்று இவர் லைலாவின் தந்தையை வேண்டிக் கொண்டார். ''ஓ லைலாவின் தந்தை யே! இவ்விஷயத்தை ஆலோசனை செய்து முடிப் பதற்காக நான் ஒரு நாள் தவணை தருகின் றேன். இதில் இரண்டுவித நிபந்தனைகள் இருக் கின்றன. எங்களுக்கிடையே அன்னியோன்னிய உறவும் சினேகப்பான்மையும் நிலவுவதற்கு ஏது வாக லைலாவை எனது மைந்தனுக்கு விவாகம் செய்துவைக்க நீர் சம்மதிக்க வேண்டுமென்பது ஒன்று. இதற்கு இணங்க உமது மனம் இடம ளிக்கவில்லையாயின் உமது புதல்வியை நீர் வைத் துக்கொண்டு உம்முடைய ராஜ்யம் பூராவையும் எமக்கு அளித்துவிட வேண்டுமென்பது மற் றொன்று. நான் உம்மை எனது ஆளுகையின் கீழிருப்பதற்கு அனுமதிப்பேன்'' என்று கூறி விட்டு மஜ்னூனின் தந்தை விடைபெற்றுக் கொண்டார்.

லைலாவின் தந்தை மீண்டும் படை திரட்டுவ தைத் தடுப்பதற்கு நௌபலும் எமன் அரசரும்



எவ்வித முன்னெச்சரிக்கையோ அல்லது முன் னேற்பாடுகளோ செய்யாது இவர்கள் இருவரும் தங்கள் படைகளோடு பஸராவைவிட்டு வெளி யேறினார்கள். தாங்கள் மறுதினம் உதயத்தில் திரும்பி வருகையில் தங்களது நிபந்தனைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நோக்கத் தோடு இவர்கள் வாபஸ் பெற்றுச் சென்றார்க ளேயன்றி தங்களது முன்னெச்சரிக்கை இன்மை யால் பேராபத்து விளையும் என்பதை இவர்கள் சிறிதேனும் சிந்தித்தார்களில்லை.

இப்பொழுது இப்னு ஸலாம் ஒரு புதிய சூழ்ச் சித் திட்டத்தை தயார் செய்திருந்தான். இவன் பாலைவனத்தின் பல பகுதிகளுக்கும் வேகமாகச் செல்லக்கூடிய குதிரை வீரர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்பி இருந்தான். மஜ்னூனைக் கண்ட இடத்தில் கொன்றுவிட வேண்டுமென்று இவன் இவ்வீரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். இவ் வீரர்களில் ஒருவனுக்கு மாத்திரம் வேறுவிதக் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மற்ற வீரர் கள் மஜ்னூனைக் கொலைசெய்வதற்காகத் தேடிக் கொண்டிருக்கையில் இவ்வீரன் திரும்ப வந்து ''தம் பாதுகாவலர்களிடமிருந்து தப்பிச்சென்ற மஜ்னூன் பாலைவனத்தில் மரணமடைந்து கிடக் கிறான்'' என்று எல்லோரிடமும் அறிவிக்குமாறு கட்டளை இடப்பட்டிருந்தான். மஜ்னூன் கொல்

RangaRakes Tamilnavarasam.com

லப்படவில்லையாயினும் இந்த வதந்தியினால் தனக்குச் சாதகம் விளையக் கூடுமென்று இப்னு ஸலாம் நினைத்திருந்தான். மஜ்னூன் மரணமடைந்துவிட்டான் என்ற சமாசாரத்தினாலும் பஸரா மன்னருக்கு மீண்டும் படைகளை அனுப்பி உதவி செய்ய முன்வருவதனாலும் லைலாவின் சம்மதத்தைப் பெறுவதற்கு ஏதுவேற்படுப் என்று இவன் நினைத்திருந்தான்.

வாகை மாலை சூடிய எமன் படைகளும் நௌபலின் வீரர்களும் லைலாவின் விடுதியை விட்டுச் சிறிது தூரம் செல்லுகையில் "மஜ்னூன் மரணமடைந்துவிட்டான், மஜ்னூன் மரணமடைந்து விட்டான்" என்று இப்னு ஸலாமின் தூதன் உரத்த குரலில் கூவிக்கொண்டு வேகமாகச் சென்றுகொண்டிருந்தான். எல்லோரும் இப் பொய் வதந்தியை நம்பினார்கள். மஜ்னூனின் தந்தை இதைக் கேட்டு கண்ணீர் வடித்தார். இதைக் கேட்ட நௌபலின் மனமும் உருகி விட்டது. "இப்பொழுது லைலாவால் நமக்கு ஆகவேண்டுவது எதுவுமில்லை. நாளைய தினம் சூரியோதயத்தின்போது இங்கு திரும்ப வந்து நாம் நமது நிபந்தனைகளை விதிக்க வேண்டும்" என்று நௌபல் கூறினார். இச்சமாசாரத்தைக் கேட்டு வருந்தாதவர்கள் இப்னு ஸலாமும் லைலாவின் தந்தையுமாகும். ஒரு நிமிடத்தை



யேனும் வீணாக்காது இப்னு ஸலாம் லைலாவின் தந்தையை அணுகி "தங்கள் புதல்வி என்னை மணப்பதற்கு இப்பொழுது எவ்வித முட்டுக் கட்டையும் இல்லை; அவள் ஒரு பெண்தானே; உயிரோடிருப்பது மரணமடைவதைவிட விரும்பத்தக்கதென்பதை இவள் உணர்ந்துகொள்ள வேண்டும். யுத்தத்தில் நான் தங்களுக்கு உதவி புரிந்தேனேயாயினும் தோல்வியடைந்துவிட்டோம். தங்களுடைய புதல்வி என்னை மணக்க சம்மதிக்கிறாள் என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் நான் நேற்று அளித்த யுத்த வீரர்களே போன்று மும்மடங்கு அதிகமானவர்களை தங்களுக்குத் தந்துதவ முடியும். அப்பொழுது ஆயிரக்கணக்கான யுத்த வீரர்கள் என்னுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து போர் புரிவதைக் காண்பீர்கள். இம்மாளிகையைப் பாதுகாத்துப் போரிடுவதற்காக என் படைகளில் ஒரு பிரிவை இங்கு நிறுத்தி வைப்பேன். மற்றொரு பிரிவு பாலைவனத்தில் பதுங்கி நின்று எமன் படைகளைப் பின்புறமாகத் தாக்கும். இவ்வாறு நாம் உமது எதிரிகளைப் பாக்குவெட்டியில் சிக்கிய பொருளே போன்று நசுக்கிவிடலாம். பாலைவனப் புயலில் சிக்கிய துணுக்குகளே போன்று இவர்கள் சிதறடிக்கப்படுவார்கள். தாங்கள் இப்பொழுதே தங்களுடைய

RangaRakes
Tamilnavarasam.com

புதல்வியினிடம் சென்று அவளின் நாவினின்று உச்சரிக்கப்படும் 'சம்மதம்' என்ற வார்த்தை தங்களை அழிவினின்று காப்பாற்றுவதுடன் தங்களது அந்தஸ்தையும் உன்னதமடையச் செய்யும் என்பதை அவள் உணரச் செய்யுங்கள்'' என்று கூறினான்.

இப்னு ஸலாம் கூறியவைகளை எல்லாம் லைலாவின் தந்தை மனப்பூர்வமாக ஆதரித்தார். அவ்வமயமே இவர் தமது புதல்வியிடம் சென்று மஜ்னூன் மரணச் செய்தியை அறிவித்தார். இவர் சென்ற சிறிது நேரத்துக்குள்ளாக அந்தப்புரத்திலிருந்து ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டமையால் மஜ்னூன் மரணமடைந்துவிட்டான் என்ற பொய் வதந்தியை லைலா நம்பிவிட்டாள் என்பதை உணர்ந்து இப்னு ஸலாம் சந்தோஷமடைந்தான். லைலாவைச் சாந்தப்படுத்துவதற்காக இவளின் தந்தை நீண்ட நேரமாக முயற்சி செய்தார். மாண்டு மண்ணுக்கிரையாகியுள்ள மஜ்னூனுக்காக வருந்துவதனாலும் அழுவதனாலும் எவ்விதப் பிரயோஜனமும் இல்லையென்றும் இப்னு ஸலாமை விவாகம் செய்து கொள்வதற்குச் சம்மதிப்பதனால் பஸரா



காப்பாற்றப்படுவது மாத்திரமன்றித் தன் தாய் நாடு ஒரு மாபெரும் ராஜ்யமாக உன்னதமடையும் என்றும் கூறினார். மேலும் ஒரு புதல்வி தனது தந்தைக்காகச் செய்ய வேண்டியுள்ள கடமைகளை இவர் வெகுவாக எடுத்துரைத்தார். தனது தேசம் அந்நியருக்கடிமையாகி தன் குடும்பமும் ராஜ்யமும் அழிக்கப்படவிருக்கும் இப்பேராபத்தான தருணத்தில் நிலைமையைச் சமாளிப்பதில் தனது தந்தைக்கு லைலா தன்னால் இயன்றதையெல்லாம் செய்ய வேண்டுவது ஒரு புதல்வியின் முதல்தரமான கடமையாகும் என்றும் தனது கோரிக்கைக்குச் சம்மதிப்பதனால் இப்பொழுது முன்னிற்கும் இப்பேராபத்து முற்றாகத் தவிர்க்கப்பட்டு விடுமென்றும் இவர் மன்றாடும் தொனியில் வாதாடினார். மஜ்னூன் உயிரிழந்துவிட்டான் என்று கருதி ஓயாது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த லைலா தனது தந்தைக்காக இத்தியாகத்தைச் செய்துதான் ஆகவேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தாள். ஆகவே லைலா தனது தந்தைக்காகச் செய்ய வேண்டியுள்ள கடமையை உத்தேசித்தும் இவரின் நிர்ப்பந்தத்துக்காளாகியும் வஞ்சக வலை வீசிய இப்னு

RangaRakes Tamilnavarasam.com

ஸலாமுக்கு மனைவியாவதற்கு வேண்டாவெறுப்புடன் சம்மதமளித்தாள். தன்னுடைய நோக்கம் நிறைவேறிய சந்தோஷத்தில் லைலாவின் தந்தை விரைந்து வெளிச் சென்றார். என்னே தலைவிதி இருந்தவாறு! தம்மைப் பிராணாபத்து அண்மித்துக் கொண்டிருக்கிறதென்பதை இவர் அறிந்துகொள்ளவில்லை.

# 7

## அதிகாலையில் மூண்ட அகோர யுத்தமும் மதிகேட்டினால் மாண்ட மன்னர்களும்

லைலாவின் சம்மதம் கிட்டிவிட்டதென்பதை இவளின் தந்தை மூலம் அறிந்துகொண்ட இப்னு ஸலாம் மறுதினம் உதயத்தில் தோன்றவிருந்த யுத்தத்திற்கு ஆகவேண்டிய ஏற்பாடுகளை ஜரூராகக் கவனிக்கலானான். இவன் உடனே தனது தளபதிகளை அழைத்து எவ்வளவு படைகள் தயாரில் இருக்கின்றன என்று விசாரித்தான். நாலாயிரம் யுத்த வீரர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று இவர்கள் பதில் கூறியதைக் கேட்டு "எதிரிகள் ஏறக்குறைய மூன்றாயிரம் சிப்பாய்களின் பலத்தோடு தாக்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது; அவ்வாறாயின் நாம் நம் விரோதிகளைவிடப் படைபலத்தில் ஓங்கியிருக்கிறோம்; இதுவுமன்றி நாம் இவர்களுக்குப் பேராச்சரியத்தை உண்டுபண்ணத்தக்க யுத்த தந்திரத்தை கையாளப் போகின்றோம் என்பதை இவர்கள் அறியவில்லை" என்று இப்னு ஸலாம் கூறினான். பிறகு இவன் இரகசியத் தூதுசெல்லும் பொருக்கியெடுக்கப்பட்ட தனது ஆட்களில் சிலரை அழைத்து தனது ஜெனரல்களிடம்

RangaRakes
Tamilnavarasam.com

சேர்ப்பிக்குமாறு சில கட்டளைகளை விடுத்தான். இக்கட்டளைகளின் பிரகாரம் அப்பொழுது தயாரிலிருந்த நாலாயிரம் வீரர்களில் அரைப்பகுதியினர் இராவேளையில் எவரும் அறியாத முறையில் மலைகளுக்கு மறைவில் லைலாவின் தந்தையினுடைய மலைப்பிரதேச மாளிகைக்குப் பக்கம் குழுமி அதிகாலையில் போருக்குத் தயாராக இருக்க வேண்டுமென்றும் எஞ்சிய மற்றோர் அரைப்பகுதியினர் பாலைவனத்தின் பல பாகங்களிலும் எவரும் அறிந்துகொள்ள முடியாத முறையில் மணற்குன்றுகளின் பக்கங்களில் பதுங்கிக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப் பட்டிருந்தார்கள். மலைப்பிரதேச விடுதியின் முன் அகோர யுத்தம் நடக்கையில் பாலைவனத்தில் பதுங்கிக் கொண்டிருக்கும் படைகள் திடும் பிரவேசமாய் வந்து எதிரிகளைப் பின்புறமாகத் தாக்க வேண்டுமென்பது இப்னு ஸலாமின் கட்டளை. இவ்வாறு இவர்களின் மீது பின்புறமிருந்து திடீர் தாக்குதல் நடத்துவதனால் எதிரிகளின் பலத்தைக் குலைத்து இவர்கள் எங்கும் பின்வாங்காதவாறு வளைந்து கொள்ளுவதோடு இவ்வொரே தாக்குதலோடு விரோதிகளைப் பூரணமாகத் தோற்கடிக்க வேண்டுமென்பது இப்னு ஸலாமின் தந்திரமாக இருந்தது.



இப்னு ஸலாம் அனுமானித்தவாறுதான் மறுதினம் துருப்பு நடமாட்டங்கள் இருந்தன. பாலைவனக் குன்றுகளை எல்லாம் தனது எழில்மிக்க நானாவிதக் கதிர்களால் கொளுத்திக்கொண்டு கதிரவன் வெளித்தோன்றிய பொழுது ஆங்காங்கு இரகசியமாக அமர்த்தி வைக்கப்பட்டிருந்த இரண்டாயிரம் போர் வீரர்களும் மலைகளுக்கு மறைவிலிருந்த இருளில் பதுங்கிக் கொண்டிருந்தார்கள். எமன் அரசரிடமிருந்து பஸராவுக்கு ஒரு தூதன் சென்றதை இப்போர் வீரர்கள் கவனித்தார்கள். ஆனால் அங்கு சென்று கொண்டிருந்த தூதனுக்கோ அல்லது எமன் வாசிகளுக்கோ அல்லது நௌபலின் ஆட்களுக்கோ இத்துருப்புகள் இங்கு நிறுத்திவைக்கப் பட்டிருக்கும் விஷயம் தெரியாது போய்விட்டது. பொழுது புலரும் வேளையில் லைலாவின் தந்தையை அடைந்த தூதன் சரணாகதி நிபந்தனைகளை அறிவித்தான். மஜ்னூன் மரணமடைந்துவிட்டான் என்ற செய்தியை இப்னு ஸலாம் பரப்பியபொழுதே மஜ்னூன் எங்கோ மாயமாக மறைந்துவிட்டதன் பயனாய் எமன் வாசிகளுங்கூட இவன் உயிரிழந்துவிட்டான் என்றே கருதியிருந்தார்களாதலின் இப்பொழுது லைலாவைப் பற்றிய நிபந்தனை எதுவுமின்றிச் சரணாகதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்

RangaRakes
Tamilnavarasam.com

டுமென்று இத்தூதன் கூறினான். இதைக்கேட்ட லைலாவின் தந்தை மிக்க அசட்டையோடு சிரிக்கலானார். இப்பொழுது இவர் தமது படைப் பலத்தைப் பற்றி பெரிதும் இறுமாப்படைந்திருந்தார். ''அவர்கள் என்னுடைய ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவார்களாயின் இதை பலாத்கார யுத்தத்தினால்தான் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை எமன் அரசரிடமும் அவருடைய நண்பனாகிய பாலைவனத் திருடனிடமும் போய்ச்சொல். பஸரா மன்னன் வீரத்தோடு உயிர் வாழ்வதையோ அல்லது யுத்தக்களத்தில் மடிவதையோதான் விரும்புகிறார் என்பதை அவர்களிடம் அறிவிப்பாயாக'' என்று லைலாவின் தந்தை மிக்க ஆக்ரோஷத்துடன் பதில் கூறினார்.

அத்தூதன் இத்துணிச்சலான பதிலை எமன் அரசரிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான். இப்பதிலைக்கேட்ட மஜ்னூனின் தந்தை பெரிதும் ஆச்சரியமடைந்தார். இவ்விதத் துணிவுக்குரிய காரணம் பற்றி இவர் பலரிடமும் பலவிதக் கேள்விகளைக் கேட்கலானார். ஆனால் இவரால் எவ்விதத் தீர்மானத்துக்கும் வர முடியவில்லை. ஆனால் சடுதியில் தீர்மானம் செய்வதிலும் விரைந்து காரியம் செய்வதிலும் கைதேர்ந்த பாலைவனப் புலியான நௌபல் பஸராமீது ஒரு



திடும் பிரவேசமான தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார். நேருக்கு நேர் நின்று வீரமாகப் போராடுவதைப் பற்றிச் சிந்தித்தார்களேயன்றி இரகசிய ஏற்பாடுகளைப் பற்றியோ அல்லது தந்திரோபாயங்களைப் பற்றியோ இவர்கள் எதையும் நினைக்கவில்லை.

அதிகாலையில் லைலாவின் தந்தையினுடைய மலைப்பிரதேச மாளிகையின் முன்னிருந்த திறந்த வெளியில் எதிர்பார்க்கப்பட்ட அகோர யுத்தம் மூண்டுவிட்டது. முதலில் பஸராவின் படைகளும் எமன் துருப்புகளோடு கூடிய நௌபலின் படைகளும் கைகலந்தன. யுத்தம் நிதானமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த இப்னு ஸலாமின் இரண்டாயிரம் வீரர்களும் பஸராப் படைகளோடு சேர்ந்துகொண்டனராகையால் பஸராவின் கை ஓங்கியது. இது நௌபலுக்குச் சிறிது அதிர்ச்சியை உண்டுபண்ணியது மாத்திரமின்றித் திடீரெனப் பின்வாங்கிச் செல்லவேண்டியதும் அவசியமாயிற்று. ஆயினும் நௌபல் தமது படைகளை ஒழுங்கு செய்துகொண்டு மீண்டும் வீராவேசமாகத் தாக்கவாரம்பித்தார். இப்பொழுது எண்ணிக்கையில் ஏறக்குறைய ஒரே வித அளவையுடைய இரு படைகளும் மிக்க ஆத்திரத்தோடும் ஆவேசத்தோடும் போர்புரிந்

RangaRakes
Tamilnavarasam.com

தனர். பெருந் திகிலோடு லைலா தனது சாளரத்திலிருந்தவாறு இந்தப் பயங்கர யுத்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யுத்தம் சிறிது போழ்தைக்கு இப்பக்கம் சாதகமாகவும் சிறிது போழ்தைக்கு அப்பக்கம் சாதகமாகவும் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டிருப்பதை லைலா கவனித்தாள். ஆனால் அதோ பாருங்கள்! இப்பொழுது நௌபலும் மஜ்னூனின் தந்தையும் ஓர் அகோரமான தாக்குதலை ஆரம்பிக்கிறார்கள்; இதனால் யுத்தம் முற்றும் எதிரிகளுக்குச் சாதகமாகிக் கொண்டிருக்கிறதென்பதை இப்னுஸலாம் கவனித்தான். அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த இரத்தக் களறி அதன் உச்சஸ்தானத்தை அடைந்திருந்தது. மஜ்னூனின் தந்தையும் நௌபலும் தங்களுடைய எதிரிகளை மிக்க வேகத்துடன் வெட்டி வீழ்த்திக்கொண்டிருந்தார்கள். இவர்கள் முன்னேறும் வேகம் இன்னும் சிறிது போழ்தைக்கு நீடிக்குமாயின் இவர்கள் வெற்றியடைவது நிச்சயம் என்று லைலா தீர்மானத்துக்கு வருகையில் பாலைவனத்தின் வெகுதூரத்தில் ஏதோ ஒருவித இயக்கம் தோன்றியதனால் இவளின் கவனம் அங்கு சென்றது. நிலைகுலைந்துகொண்டிருக்கும் தனது படைகள் பின்வாங்கிவிடாதவாறு உற்சாகமூட்டுவதற்கு லைலாவின் தந்தை பகீரதப்பிரயத்த



னம் செய்தாரேயாயினும் இவரின் படைகள் நம்பிக்கையிழந்து பின்சென்றுகொண்டிருந்தன என்பதை லைலா கண்டாள். ஆனால் அதோ தூரத்திலிருந்து அலை அலையாக வந்துகொண்டிருப்பதென்ன? பாலைவனத்திலிருந்து வாயுவேகமாக ஏவிவிடப் பட்டிருப்பதென்ன? என்றெல்லாம் இவள் தன்னைக் கேட்டுக்கொண்டிருந்தாள். பாலைவனத்தில் கிளப்பப்பட்ட ஒரு மாபெரும் புழுதி அலை சமீபித்துக்கொண்டிருந்தது. இவ்வலை மேலும் சமீபத்தை அடைகையில் இதனூடே ஆயுதம் தாங்கிய திரளான குதிரை வீரர்கள் அதிவேகமாக வந்துகொண்டிருந்தார்கள் என்பது தெளிவாயிற்று. ஒரு சக்தி வாய்ந்த குதிரைப்படை இப்பொழுது எதிரிகளைப் பின்புறமாகத் தாக்குவதற்குப் பாய்ந்து வந்தது. இவர்கள் வந்த வேகத்தின் பயனாய்க் குதிரைகளின் குளம்புகளினால் கிழப்பப்பட்ட பாபெரும் சப்தத்தினால் பூமியே அதிர்ச்சியடைந்தது. ஒரு சூறாவளிக் காற்றே போன்று இவர்கள் எதிரிகளின் மீது பாய்ந்து தாக்கினார்கள். ஒரு சிறிது வேளைக்குள் இவர்கள் தங்கள் எதிரிகளை ஹதம் செய்துவிட்டார்கள். புயலில் சிக்கிய துரும்புகள் எவ்வாறு நிலைத்து நிற்க முடியும்? ஆகவே முறியடிக்கப்பட்ட எமன் படைகளும் பாலைவனப் போர்வீரர்களான நௌ

RangaRakes Tamilnavarasam.com

பலின் துருப்புகளும் பெரும்பாலும் சிதைக்கப்பட்டுவிட்டார்கள். எஞ்சியவர்கள் ஓட்டம்பிடித்தார்கள். கைஸின் தந்தை சரணடைய மறுத்து இறுதிவரை போராடி யுத்தக்களத்திலேயே உயிரிழந்தார். எதிரிகளால் சிறைபிடிக்கப்படுவதையோ அல்லது தோல்வியில் உயிர்வாழ்வதையோ விரும்பாத நௌபல் தம்மைத் துரத்திக்கொண்டு வந்த திரளான குதிரை வீரர்களைப் பார்த்து நகைத்தார். குதிரைச் சவாரி செய்வதில் திறமை வாய்ந்திருந்த இவர் வேகத்தில் முதல் ஸ்தானம் வகித்து வந்த தமது அருமந்த குதிரையின் உதவியினால் வெகுதூரம் வரை எதிரிகளைத் தாண்டிச் சென்றிருந்தார். தப்பிச் செல்வது இவருக்குச் சாத்தியமாக இருந்ததேயாயினும் இவர் தமது வீரர்களை இழந்துவிட்டு இவ்விதத் தோல்வியோடு உயிர் வாழ விரும்பவில்லை; தமது குதிரை பூரண வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கையிலேயே இவர் தம்மை மாய்த்துக் கொண்டார்.

லைலாவின் தந்தை யுத்தத்தில் வெற்றியடைந்தாரேயாயினும் கடுமையான காயமடைந்திருந்தார். அந்த வெற்றித்தின இரவிலேயே இவர் தமது புதல்வியை இப்னு ஸலாமுக்கு மணம் செய்து வைத்தார். நிர்ப்பந்த விவாகம் நடைபெற்ற அதே இரவில் லைலாவின் தந்தை யுத்



தத்தில் பட்டிருந்த கொடிய காயத்துக்கு இரையாகி மரணமடைந்தார். மதிகேட்டினால் மடிந்த மன்னர்களின் ராஜ்யங்களையெல்லாம் சுவீகரித்துக்கொண்டு இப்னு ஸலாம் ஒரு மாபெரும் மன்னனாகத் திகழ்ந்தான். தான் செய்த சூழ்ச்சிகளின் வெற்றியைக் கண்டு இவன் மகிழ்ச்சியடைந்தானேயன்றித் தன் உயிரைக் கொள்ளையிட்டுச் செல்வதற்கு எமன் தன்னை அண்மித்துக் கொண்டிருக்கிறான் என்பதை இவன் உணரவில்லை. இந்த ராஜ்யத்துக்கு ராணியாக விளங்கிய லைலா தனது காதலனை இழக்க நேரிட்டமையால் செடியிலிருந்து பிடுங்கப்பட்ட ரோஜா புஷ்பத்தைப் போன்று வாடிக்கொண்டிருந்தாள். வசந்த காலத்தின் செந்நிற ரோஜாமலரைப் போன்ற வசீகரத் தோற்றத்துடன் ஜொலித்துக்கொண்டிருந்த இவ்வனிதை இப்பொழுது கோடைகாலத்தின் வெண்ணிற ரோஜாவைப் போன்று வாடிவதங்கிப் போயிருந்தாள்.

RangaRakes Tamilnavarasam.com

8

## மஜ்னூனின் வருகை

விவாக பந்தத்தில் மாட்டிவைக்கப்பட்ட லைலா மஜ்னூன் மரணமடைந்துவிட்டான் என்றே கருதியிருந்தாள். இவ்வித எண்ணத்தில் வருடங்கள் சில கழிந்துவிட்டன. இப்னு ஸலாமுக்கு எதிரியாக எவரும் முளைக்கவில்லையாதலால் இவன் சமாதானமாக ஆட்சிபுரிந்து வந்தான். லைலா சம்பந்தப்பட்டவரை இவனின் ஆட்சி அமைதியற்றதாக இருந்தது. தன் பறவைகளோடு விளையாடுவதுதான் லைலாவுக்கு முக்கிய பொழுதுபோக்காக இருந்தது. லைலாவின் தந்தையினுடைய மாளிகைதான் இப்னு ஸலாமின் தலைமைக் காரியாலயமாகவும் இருப்பிடமாகவும் இருந்தது. லைலா இங்கு தன் இரு வெண்புறுக்களோடும் துரதிர்ஷ்டம் வாய்ந்த மலைப்பிரதேச மாளிகையில் வசிக்கும்பொழுது தனது பணிப்பெண்ணால் அளிக்கப்பட்ட கிளியோடும் காலம் கழித்து வந்தாள். ஒருபொழுதும் மறக்க முடியாத தனது இழந்த காதலைப் பற்றி இறும்பூதெய்துவதில் இப்பறவைகள் இவளுக்கு உதவி புரிந்து வந்தன. அந்தக் கிளிதான் இவளின் அந்தப்புரத்தில் ஆட்சி புரிந்து வந்தது. இது



இவளுக்கு மதிக்கவொண்ணாத ஐஸ்வரியமே போன்றிருந்தது. ஏனெனில் இது இவளுக்குத் தன் காதலனின் பெயரைச் சதா உச்சரித்து ஞாபகமூட்டிக்கொண்டிருந்தது. இக்கிளி சதா 'மஜ்னூன், மஜ்னூன்' என்று உச்சரித்துக் கொண்டிருப்பதைக் கேட்பதில் லைலா ஆனந்தம் கொண்டாள். மஜ்னூனிடம் மிக்க விசுவாசம் கொண்டிருந்த ஜைத் தனது எஜமானைத் தேடுவதில் பாலைவனத்தைச் சுற்றிச் சுற்றி நீண்ட நாட்களைக் கழித்துவிட்டு இப்பொழுது லைலாவின் முதன்மையான சேவகனாக அமைந்திருந்தான்.

ஒரு தினத்தில் ஜைதுக்கு ஒருவரிடமிருந்து அவசரச் செய்தியொன்று வந்திருந்தது. ஒரு குறித்த இடத்துக்கு வரவேண்டுமென்று ஜைதுக்கு அழைப்பு வந்திருந்தது. ஜைத் அவ்விடம் சென்றபொழுது இவன் அடைந்த ஆச்சரியத்துக்கும் ஆனந்தத்துக்கும் அளவேயில்லை. நீண்டகாலத்துக்கு முன்னே மரணமடைந்துவிட்டதாகக் கருதி ஜைதும் லைலாவும் வெகுவாகத் துக்கப்படுவதற்குக் காரணமாக இருந்த மஜ்னூன் பூரண சுகத்தோடும் சுவாதீனமாகவும் அங்கு அமர்ந்துகொண்டு மிக்க அன்புடன் முகமன் கூறினான். மஜ்னூன் ஒரு வெளிநாட்டு வியாபாரியைப் போன்று மாறுவேடம் பூண்டு வந்

RangaRakes
Tamilnavarasam.com

திருந்தானேயாயினும் இவனை அறிந்துகொள்
வதில் ஜைதுக்குக் கஷ்டமேதும் இருக்கவில்லை.
கைஸின் நன்மைக்காகத் தன் வாழ்நாள் அனைத்
தையும் செலவுசெய்துள்ள ஜைத் தனக்கிடப்
படும் எந்தக்கட்டளையையும் நிறைவேற்றுவதா
கக் கூறினான். இருவரும் மிக்க அன்னியோன்
னியமாகச் சம்பாஷித்தபின் ஒருவித ஏற்பாட்
டுடன் விடைபெற்றுக் கொண்டார்கள். இவர்
கள் மீண்டும் சந்திப்பதற்குப் பாலைவனத்தின்
எல்லையொன்று குறிக்கப்பட்டது. லைலாவிடம்
ஜைத் இந்தச் சந்திப்பைப் பற்றியோ அல்லது
மஜ்னூனின் வருகையைப் பற்றியோ எதுவும்
கூறவில்லை. அன்றியும் மஜ்னூனுக்கு அளிப்ப
தற்காக ஜைத், லைலாவின் புறுக்களில் ஒன்
றைக் கைப்பற்றிச் சென்றான். முன்னொருமுறை
நடந்தது போன்ற சம்பவம் மீண்டும் நடை
பெறுமென்று இவன் எதிர்பார்த்தான். இவர்
கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த
பாலைவன எல்லைக்கு ஜைத் வந்து சேர்ந்த
பொழுது மஜ்னூனின் ஆனந்தம் அளவுகடந்த
தாக இருந்தது. இவர்கள் சந்தித்தது சூரியஸ்
தமன வேளையாக இருந்தமையால் பாலைவனத்
தில் தோன்றும் அந்திப் பொழுதின் அழகிய
காட்சிகள் மஜ்னூனின் ஆனந்தத்தைப் பன்
மடங்கு அதிகரிக்கச் செய்தன.



மாலையில் வழக்கம்போல் லைலா தனது அந்
தப்புரத்தின் ஏகாந்த அறைக்குச் சென்ற
பொழுது தனது புறுக்களில் ஒன்று காணப்
படவில்லை என்பதை அறிந்தாள். இது இவ
ளுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. ஒரு
வேளை அகஸ்மாத்தாக இது 'அப்பாலுள்ள
மரத்தில்' அமர்ந்திருக்கக் கூடுமென்றும் மற்றப்
புறு அங்கு செல்லுகையில் அதுவும் கூட வந்து
விடுமென்றும் நினைத்துத் தன் கையிலிருந்த
புறுவை வெளியில் அனுப்பினாள். ஆனால் இது
இவள் நினைத்ததற்கு மாறாக தனிமையாகத்
திரும்பி வந்தது. இச்சம்பவம் இவளுக்கு ஆச்
சரியத்தை உண்டுபண்ணியது மாத்திரமன்றிப்
பழைய ஞாபகங்களையும் நினைவூட்டியது. சிந்த
னையில் ஆழ்ந்தவளாய் இவள் சாளரத்தின் அரு
கில் அமர்ந்தாள். "மூன்று வருடங்களுக்கு முன்
எனது அருமைப் புறுக்களில் ஒன்று காணாமற்
போய்விட்டது; ஆனால் சிறிது நேரத்துக்குள்
ளாக என் அருமை மஜ்னூனிடமிருந்து ஒரு
காதற்கடிதத்துடன் திரும்பி வந்தது. இதன்
பிறகு நான் காதலர்களைக் கூட்டுவிக்கும் கானக
நீர் அருவியில் வைத்து எனது உயிர்த்தோழ
னைச் சந்தித்து ஆனந்தமாய்க் காலம் கழித்து
வந்தேன்; ஆ! என்ன துரதிர்ஷ்டம்; ஆனந்த
அதிர்ச்சியினால் எனது உள்ளத்தைக் குளிரச்

RangaRakes

Tamilnavarasam.com

செய்த அக்காலம் என்னிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. மஜ்னூன் மரணமடைந்து விட்டான். நான் மற்றொருவரின் மனைவியாக இருக்கிறேன்'' என்றெல்லாம் இவள் நினைக்கையில் வாடி வதங்கியிருந்த இவளின் அழகிய கன்னங்கள் வழியாக முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகள் வடிந்துகொண்டிருந்தன. இவளின் மனத்துயர் சகிக்க முடியாததாக இருந்தது. சாளர உத்தரத்தின் மீது ஒன்றின் மேல் ஒன்றாக வைக்கப்பட்டிருந்த தனது கரங்களின் மீது நெற்றியை வைத்தவாறு இவள் சிறு பிள்ளையைப் போன்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

நீண்ட நேரமாக இவ்வாறு இவள் அசைவற்று இருந்தாள். திடீரென ஒருவித சப்தம் கேட்கவே அழுதுகொண்டிருந்த லைலா தலையை நிமிர்த்தினாள்; காணாமற்போன தனது புறாவின் கூவுதல்தான் இச்சப்தம் என்பதை இவள் அறிந்தாள். இவ்வொலி எதிரிலிருந்த மரத்திலிருந்து வந்துகொண்டிருந்தது. உடனே தன்னருகே இருந்த புறா அம்மரத்தை நோக்கிப் பறந்து சென்றது. 'நான் உன்னை நீண்ட நேரமாக எங்கெங்கெல்லாமோ தேடினேன்; என்னை விட்டுவிட்டு நீ எங்கு சென்றிருந்தாய்' என்று கேட்பது போலிருந்தது, பிரிந்து கூடிய அவ்விரு பற



வைகளுடையவும் குலாவுதல். இதைப் பார்த்துக்கொண்டிருந்த லைலா ''எனக்கும் இறக்கைகளிருக்குமாயின் நானும் என் உயிர்த் தோழனைத் தேடிப் பறந்து சென்றிருப்பேன்'' என்று நினைத்தாள்.

இவள் இவ்வாறு நினைக்கையில் மரத்திலிருந்த இரு பறவைகளும் வந்து லைலாவின் தோள்களில் அமர்ந்தன. இதென்ன ஆச்சரியம்! முன்னொரு முறை இப்பறவையின் காலில் கட்டப்பட்டிருந்தது போன்று இப்பொழுதும் இதன் காலொன்றில் ஒரு மிருதுவான காகிதச் சுருளை ஒன்று இணைக்கப் பட்டிருப்பதைப் பார்த்து லைலாவின் இருதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்தது. நடுங்கிக்கொண்டிருந்த தன் விரல்களினால் இவள் அதை அவிழ்த்து அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறதென்பதை மிக்க ஆவலோடு வாசித்தாள். இந்த லிகிதம் மஜ்னூனிடமிருந்து வந்திருக்கிறதென்பதை இவள் சந்தேகமின்றி உணர்ந்து கொண்டாள். அவ்வாறாயின் இவன் எவ்விதப் பிணியுமின்றி உயிரோடிருக்கிறான்! முந்திய வழக்கம்போல் அன்றிரவு சந்திரன் தோன்றுகையில் காதலர்கள் கூடும் கானக நீரருவியில் வந்து சந்திக்க வேண்டுமென்று இக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

RangaRakes
Tamilnavarasam.com

தன்னுடைய காதலன் பூரண சுகத்துடன் உயிரோடிருக்கிறான் என்ற செய்தியினால் திடீரென லைலாவுக்கேற்பட்ட சந்தோஷத்தினால் இவள் மற்றெல்லா விஷயங்களையும் மறந்துவிட்டாள். நடுநிசிவரை இவளின் மனநிலை அமைதியற்றதாக இருந்தது. சந்திரன் தோன்றியதால் இருளடைந்திருந்த பாலைவனப் பிரதேசமெல்லாம் பிரகாசிக்க ஆரம்பித்த வேளையில் லைலா ஒரு நீண்ட அழகிய அங்கியை அணிந்துகொண்டு சப்தம் செய்யாது கீழ்மாடியையடைந்தாள். யாரும் காணாதவாறு இவள் மாளிகையின் பின்புறவாயிலொன்றை அடைந்தாள். மிருதுவாக இதைத் தன் பின்புறமாகத் தாளிட்டுக்கொண்டு வெளிச் சென்றாள். இவள் செல்லுமுன்பாகவே இவளின் இருதயம் மஜ்னூனை நோக்கி விரைந்து சென்றது. அவள் வேகமாக அடிவைத்துச் சென்றுகொண்டிருந்தாள். ஆனால் லைலாவின் மனதில் திடீரென ஓர் உணர்ச்சி தோன்றியது. விரைவாக அடித்துக்கொண்டிருந்த இவளின் இருதயம் திடீரென நின்றுவிடும்போலிருந்தது. இவளின் கண் இருண்டுவிட்டது; தலை சுழலவாரம்பித்தது; காலடி தத்தளித்தது; தரையில் சாய்ந்து வீழ்ந்துவிடும் தறுவாயில் ஒரு மரக்கிளையைப் பற்றிக்கொண்டு அதன் ஆதரவில் நேராக நின்றாள்.



"எனது கணவன், எனது கடமை! கடமைக்காக ஏற்கனவே நான் என்னைத் தியாகம் செய்துள்ளேன். இப்பொழுது நான் இந்த தர்மத்துக்கு எதிராகக் காரியம் செய்யத் துணிவது நியாயமாகுமா? இதன் விளைவு என்னவாகும்? மஜ்னூன் என்னை ஆலிங்கனம் செய்தவுடன் எனது கடமை, எனது கணவன், எனது பிரஜைகள், எனது தேசம் ஆகியவை அனைத்தையும் மறந்துவிடுவேன். இது பெரும் பிழையாக முடியும். ஒருமுறை இக்குற்றத்தை இழைத்துவிடுவேனாயின் ஒருபொழுதும் இதிலிருந்து தப்புவது முடியாது. ஆ! என்ன துரதிருஷ்டம்! இது ஒரு உண்மையான மனைவியின் செய்கையாகாது!" என்றெல்லாம் இவள் அக்கிளையைப் பிடித்தவாறு சிந்திக்கலானாள். என்ன செய்வதென்ற தீர்மானத்துக்கு வரமுடியாதவாறு தவித்துக்கொண்டிருந்தாள். ஆனால் இறுதியில் இவளுக்கிருந்த கடமை என்ற உணர்ச்சி வெற்றி பெற்றுவிட்டது. தனது தீர்மானத்தை மாற்றிக் கொண்டு தலைவிதியை ஏற்றுக்கொள்வதென்ற முடிவுக்கு வந்தாள்.

லைலா ஒருவாறு தன்னைத் தேற்றிக்கொள்ள முயன்றாள். பிறகு கனவு காண்பவளே போன்று பெருமூச்சுவிட்டவாறு அழுதுகொண்டே தனது மாளிகையை நோக்கி நடக்கலானாள். இவள்

RangaRakes

Tamilnavarasam.com

வெளியில் சென்றதையோ அல்லது திரும்பி வந்ததையோ ஜைதைத் தவிர வேறு எவரும் அறியவில்லை. அன்றிரவு பூராவும் அவள் துயில்கொள்ளவில்லை. தனது துக்கமேலீட்டினுல் இடைவிடாது ஏங்கியேங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டே இருந்தாள். பொழுது புலர்ந்தபோதுதான் இவளின் அழுகையும் கண்ணீரும் நின்றன. தனது துயரத்தை அடக்கிக் கொள்வது கஷ்டமாக இருந்ததேயாயினும் வேறு எவரும் சந்தேகித்து விடக் கூடாதென்பதை உத்தேசித்துக் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

மஜ்னூன் நீண்ட நேரமாக கானகநீரருவியினண்டை காத்திருந்தானேயாயினும் ஏமாற்றமடைந்தான். தன் காதலி தன்னைச் சந்திப்பதற்காக வெளியில் வந்துவிட்டுத் திரும்பச் சென்றுவிட்டாள் என்ற விஷயத்தை ஜைத் இவனிடம் அறிவித்தான். லைலாவின் துரதிர்ஷ்ட நிலையையும் அவள் மஜ்னூனைச் சந்திக்க முடியாது போனது பற்றிக் கொண்டுள்ள துயரத்தையும் ஜைத் விரிவாக எடுத்துரைத்தான். தனது உயிரைத் தியாகம் செய்யுமுன் தன்னருமைக் காதலியை ஒருமுறையேனும் பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தோடு மஜ்னூன் மற்றோர் முறையும் மறைந்துவிட்டான்.

# 9

## பிரிந்து கூடிய காதலர்களும் விரைந்து வந்த வினையும்

தன்னுடைய கடமைக்காகத் தன்னை இருமுறை அர்ப்பணம் செய்த லைலா, மஜ்னூனைப் பார்க்க முடியாது போனது பற்றி பெருந் துயரடைந்தாள். இவள் திடசித்தத்தோடு தன்னுடைய மாளிகையை நோக்கித் திரும்பிச் சென்றதே போன்று அளவற்ற ஏமாற்றமடைந்த மஜ்னூன் தூரதேசங்களை நோக்கித் துரிதமாக நடந்தான். ஒருவிதத் துணிவு இவனைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்தது. லைலாவின் காதலினுல் கிடைக்கக்கூடிய ஆனந்த பரவசம் இல்லாது போய்விடினும் முன்வரும் வருடங்களில் தன்னுடைய பெருந்துயரேனும் அடங்க வேண்டுமென்று இவனின் உள்ளம் பிரார்த்தனை புரிந்தது.

இரண்டு வருடங்கள் கழிந்தன; எதிர்பாராதது நிகழ்ந்தது. இப்னு ஸலாம் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தான். இதன் பயனுய் இவன் வெகுகாலம் செல்லுமுன்பாகவே மரணமடைந்துவிட்டான். மூன்று ராஜ்யங்களுக்கு

RangaRakes
Tamilnavarasam.com

மன்னனுகத் திகழ்ந்த இப்னு ஸலாமின் மரணச் செய்தி பல தேசங்களிலும் துரிதமாய்ப் பரவியது. இச்சமயம் ஓர் தூரதேசத்தில் அஞ்சாவாசம் செய்துவந்த மஜ்னூனின் காதில் இச்செய்தி எட்டியது. இப்பொழுது தான், தன் காதல் களஞ்சியத்தை அடைவதில் எவ்விதத் தடையுமில்லை என்பதை இவன் உணர்ந்தான். ஒரு மாபெரும் சாம்ராஜ்யமும் அதன் ராணியும் இவனை நல்வரவேற்று உபசரிப்பதற்குத் தயாராக இருந்தனர். எதிர்பாராத முறையில் தனக்குக் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணிய மஜ்னூன் தன் குதிரையின் மீதமர்ந்து வாயுவேகமாக அதைத் தட்டிவிட்டான். ஒரு வினாடியையேனும் வீணாக்காது கூடிய விரைவில் பஸராவை அடைய வேண்டுமென்பதுதான் இவனின் அப்பொழுதைய அவாவாக இருந்தது. ஆனால் மற்றோர் முக்கிய விஷயத்தைப் பற்றிய எண்ணம் தன்னுடைய மனதில் புகவே, தன் குதிரையின் வேகத்தைத் தளர்த்திக் கொண்டு சாவதானமாகச் சென்றான். லைலா ஏற்கனவே இருமுறைகள் தன்னைக் கடமைக்காகத் தியாகம் செய்திருக்கிறாள். தன் கணவன் மரணமடைந்ததன் விளைவாய் விதவையாக மாறியுள்ள இவள் நான்கரை மாதங்கள்வரை மறைவிலி



ருக்க (இத்தா) வேண்டுமென்பது மதக்கட்டளை என்பதையும் இக்கட்டளையை இருவராலும் மீற முடியாதென்பதையும் நினைவிற்குக் கொணர்ந்த மஜ்னூன் மிகவாக வருந்தினான். இந்த நான்கரை மாதங்களும் இவனுக்கு நான்கரை யுகங்களே போன்றிருந்தன. இவன் இக்காலத்தை மாறுவேடத்தில் கழிப்பதென்று தீர்மானித்தான். லைலாவின் மாளிகையின் வெளிச்சம் தெரியும் தூரத்தில் தன்னுடைய இருப்பிடத்தை அமைத்துக்கொண்டு ஏகாந்தமாக இக்காலத்தை இவன் கழித்து வந்தான். எதிர்பார்த்திருப்பதென்பது மரணத்தைவிடக் கொடியதென்று கூறப்படுகின்றது. மஜ்னூனின் விஷயத்தில் இவ்விஷயம் முற்றும் உண்மையாக இருந்தது. இவனுடைய இப்பொழுதைய நிலைமை இவன் மஜ்னூன் என்று பட்டம் வாங்குவதற்குக் காரணமாக இருந்த இவனின் ஆரம்ப நிலைமையைவிட மோசமாக இருந்தது. ஆனால் ஆரம்ப உபத்திரவத்தைச் சகித்துக் கொண்டதேபோல் இப்பொழுது தோன்றிய மகத்தான மனக்கிலேசத்தையும் இவன் ஒருவாறு சகித்துக்கொண்டு தான் மனதிற் கொண்டிருந்த சுவர்க்க வாயிலில் காத்திருந்தான்.

• தான் லைலாவை நேரில் சந்திக்க முடியாதிருப்பினும் தன்னுடைய வருகையைப் பற்றிய செய்

RangaRakes
Tamilnavarasam.com

தியை இவன் ஜைதின் மூலம் அவளுக்கு அறிவித்திருந்தான். ஜைதின் மூலம் லைலா அடிக்கடி மஜ்னூனுக்குச் செய்தி அனுப்பி வந்தாள். ஆனால் இத்தாவின் காலம் கழியும்வரை தன் காதலிக்கு மஜ்னூன் எவ்விதச் செய்தியும் அனுப்பத் துணியவில்லை. குறித்த நாட்கள் காலாவதியான மறுதினம் ஜைதின் மூலம் லைலாவுக்கு மஜ்னூன் அனுப்பிய தூதின் மூலம் ''நான் இன்று மத்தியான வேளையில் உன் மாளிகையில் உன்னை வந்து சந்திக்க விழைகின்றேன்; அல்லது நீ விரும்புவாயாயின் சூரியஸ்தமனமாகி இரண்டு மணி நேரம் கழிந்த பிறகு நான் உனக்காகக் காதலர்கள் சந்திக்கும் கானக நீரருவியினண்டை காத்திருப்பேன்'' என்று அறிவித்திருந்தான்.

இதற்குப் பதிலாக லைலாவிடமிருந்து சிறிது தாமதித்து வந்த செய்தியில் ''மத்தியான வேளை மறைந்துவிட்டது; ஆனால் இன்றைய மாலைப்பொழுது கழிந்த பிறகும் மத்தியான வேளை வரவிருக்கிறது'' என்று அறிவிக்கப்பட்டது. இப்பதில் மஜ்னூன் எதிர்பார்த்ததற்கு எதிரிடையாக இருக்கவில்லை.

துரதிருஷ்டம் வாய்க்கப்பெற்ற இக்காதலர்களுக்கு இதுவரை ஏற்பட்ட சோக சம்பவங்களைப் பற்றி வாசகர்கள் பெரிதும் துயரடைந்திருப்பார்கள். ஆனால் நாம் இன்னும் இக்கதையின் துயரச் சிகரத்தை அடைந்துவிடவில்லை. இதற்கு மேல்தான் இக்கதையின் உண்மையான சோகக் கட்டம் கூறப்பட வேண்டியிருக்கிறது.



சூரியஸ்தமனமாகி இரண்டு மணி நேரம் கழிந்த பிறகு மஜ்னூன் காதலர்கள் கூடும் கானக நீரருவிக்குச் சென்று லைலாவுக்காகக் காத்திருந்தான். இதேவேளையில் லைலா முன் போல் கவர்ச்சியைத் தரும் ஆடை ஆபரணங்களை அணிந்துகொண்டு பின்புற வாயில்வழியாக வெளியில் சென்றாள். இவளின் உள்ளம் புளகாங்கிதம் கொண்டிருந்தது; கண்கள் பிரகாசம் பொருந்தியிருந்தன. அப்பொழுது வானத்தில் சந்திரன் இருக்கவில்லை. ஆனால் அன்று இரவு என்றுமில்லாதவாறு நட்சத்திரங்கள் நிறைய இருந்தன. ''அதோ பார்! அன்றொரு இரவில் அழகு மிக்க அணங்காக ஜொலித்துக்கொண்டிருந்த லைலா நீண்டநாட்களுக்குப் பின் பிரகாசம் பொருந்திய முகார விந்தத்துடன் இன்றிரவு நம்மிடம் மீண்டிருக்கிறாள். இன்று இவள் இவ்வளவு சுறுசுறுப்பாகவும் சந்துஷ்டியோடும் இருப்பதற்குக் காரணமென்ன?'' என்று கேட்கும் தோரணையில் நட்சத்திரங்கள் லைலா விரைந்து சென்றுகொண்டிருந்த பிராந்

RangaRakes
Tamilnavarasam.com

தியத்தில் அதிக ஒளியை வீசின. தனது தந்தையின் உத்தியான வனத்திலிருந்த அடர்ந்த மரங்களினூடே லைலா விரைந்து சென்றுகொண்டிருந்தாள். அவளின் இருதயம் படபடவென வேகமாக அடித்துக்கொண்டிருந்தது; அவள் விரைந்து செல்லும் வேகத்தில் மூச்சுத் திணறுவதாக இருந்தது. விரைந்து சென்றுகொண்டிருந்த இவளின் பாதங்கள் ஓடவாரம்பித்தன. அவளின் உயிர் வாழ்க்கையே அவ்விரு பாதங்களின் மீது அமைந்திருப்பதே போன்று காணப்பட்டது. அடுத்துள்ள காட்டின் எல்லையை அடைந்தவுடன் இவள் தனது மார்பின் மீது கைகளைக் கட்டிக்கொண்டு சிறிது போழ்தைக்கு நின்றாள். தான் மஜ்னூனைச் சந்திக்கும்பொழுது இளைப்பின்றிச் சாவதானமாகப் பேசவேண்டுமென்பது அவளின் அவா. அன்றியும் தான் ஓட்டமாக வந்த விஷயத்தை அவன் அறிந்துகொள்ளக் கூடாதென்று இவள் கருதினாள். ஆனால் அவள் தன் களைப்பு தீருவதற்கு முன் மீண்டும் ஓடலானாள். ஆதலின் அவளின் சுவாசம் மேலும் வேகமாகச் செல்லவாரம்பித்தது. மஜ்னூனை வெகுநேரம் காக்கவைக்கக் கூடாதென்ற இவளின் கவலைதான் இவளை இவ்வாறு ஓடச் செய்தது. இப்பொழுது லைலா கானக நீரருவியை அடைந்துவிட்டாள். அது மரங்களி



னூடே அவளுக்குக் காட்சியளித்தது. அந்த நட்சத்திர ஒளியிலுங்கூட அந்த நீரருவி பளபளவெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இந் நீரருவியின் திறந்த வெளியின் அருகில் லைலா அமைதியற்றவளாய் நின்றுகொண்டிருந்தாள். அவள் நேர்த்தியாக அணிந்துகொண்டிருந்த ஆடைகள் குலைந்துவிட்டன; அவள் அதிக ஜாக்கிரதையோடு வாரி முடித்துக்கொண்டு வந்திருந்த அவளின் தலைமுடி நெகிழ்ந்துவிட்டது; அவளின் மார்பு வெகுவாக விம்மிக்கொண்டிருந்தது.

ஒரு வினாடியேனும் கழிவதற்கு முன் நீரருவியின் பக்கமிருந்து ஓர் உருவம் விரைந்து வந்தது. லைலா தள்ளாடிக்கொண்டே அவ்வுருவத்தை நோக்கிச் சென்றாள். இரு காதலர்களும் சந்தித்தார்கள். ஆனால் வார்த்தைகள் ஏதும் உபயோகிக்கப்படவில்லை. இவர்களின் விழிகள் மாத்திரம் சிறிது போழ்தைக்கு உரையாடின. மிக்க ஆவேசத்துடன் மஜ்னூன் லைலாவை இறுகக் கட்டி ஆலிங்கனம் செய்தான். லைலா தன்னை அறியாமலே ஒருவித ஆனந்தக் கூச்சலிட்டாள்.

காதலுக்குக் காலவரையறை கிடையாதாகையால் இவர்கள் இருவரும் இவ்வாறு இறுகத்



RangaRakes Tamilnavarasam.com

தழுவிக்கொண்ட வேளை ஒரு நொடி நேரமா அல்லது ஆயிரம் வருடங்களாவென்பதை யார் அறிவர்? ஆனால் சூரியாஸ்தமனமாகி இரண்டு மணிநேரம் கழிந்த பிறகு அன்று வந்த அவ்வேளைதான் அவர்களுக்கு மாபெரும் அனர்த்தமாக முடிந்தது. இதுவரை இவர்களைக் காத்திருந்த விதி அன்று தினம் அதிவிரைவில் வந்துவிட்டது. வசந்தகால ரோஜா மலரின் இதழ்களே போன்றிருந்த லைலாவின் உதடுகள் தன் உதடுகளில் பதிந்துவிட்ட அதேவேளையில் மஜ்னூன் தன்னுடைய அறிவை இழந்துவிட்டான். அவனுடைய ஆவல்மிக்க உதடுகள் அவளின் விம்மிய உதடுகளில் செம்மையாய்ப் பதிக்கப்பட்டவுடன் லைலா மூர்ச்சையடைந்து உயிரற்ற உருவமே போன்று அவனின் கரங்களில் சாய்ந்தாள். அவன் அவளை விழ விட்டு விட்டு காட்டினூடே கதறிக்கொண்டு ஓட்டமாகச் சென்று அருகாமையிலிருந்த பாலைவனத்தை அடைந்தான். முன்னொருமுறை செய்ததேபோல் இவன் இப்பொழுதும் இவளின் பெயரைப் பாலைவனத்தின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் சென்றான். "லைலா, லைலா, லைலா" என்று இவன் இடைவிடாது செய்து சென்ற கூச்சலின் எதிரொலி பாலைவனமெங்கும் பிரதிபலிப்பதாக இருந்தது. இவனது கதறலைக் கேட்டுக் கரைந்



துருகாத பாலை ' பிராணி எதுவுமிருக்கவில்லை. இவனின் பாதங்களுக்கோ அல்லது நாவிற்கோ ஓய்வென்பது சற்றும் இருக்கவில்லை. இறுதியில் இவன் ஆங்கோர் இடத்தில் மூர்ச்சையாகி வீழ்ந்து கிடந்தான். இவனது குரலோசையைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த ஜைத் இவனைக் கண்டெடுத்துச் சென்றான். பல தினங்கள் இராப்பகலாக மஜ்னூனை அவனது சுய அறிவுக்குக் கொண்டுவருவதற்கு ஜைத் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வந்தானாயினும் எவ்விதப் பயனும் விளையவில்லை. பல வருடங்களின் துயரமும், துன்பமும் செய்யமுடியாத தீமைச் சில விநாடிகளின் ஆனந்தக் களிப்பு அளித்துவிட்டது. அளவை மீறிய ஆனந்தம் வினையாக முடிந்தது. இப்பொழுது மஜ்னூன் பூரணமாகப் பைத்தியம் கொண்டுவிட்டான்.

மூர்ச்சையாகி வீழ்ந்து கிடந்த லைலா உணர்வு பெற்று எழுந்தாள். 'எனது மஜ்னூன் எங்கே?' என்று கூறியவாறு இவள் நாற்புறமும் நோக்கினாள். எனினும் மஜ்னூன் காணப்படவில்லை. ஆனால் தன்னுடைய பெயர் இடைவிடாது உச்சரிக்கப்படுவதைக் கேட்டு அங்குமிங்குமாக ஓடினாள். இவள் மஜ்னூனை அவ்வனத்தில் தேடிக்கொண்டிருக்கையில் இதுவரை கேட்டுக்கொண்டிருந்த தொனி சிறிது சிறிதாகக் குறைந்து

RangaRakes
Tamilnavarasam.com

இறுதியில் அப்பாலேவன வெளியிலேயே மறைந்துவிட்டது. பெருத்த ஏமாற்றத்துக்குள்ளான லைலா தனது மஜ்னூனை மற்றோர் முறையும் தன்னிடம் சேர்ப்பிக்குமாறு ஆண்டவனைப் பிரார்த்தித்துவிட்டு தள்ளாடிக்கொண்டே தன் மாளிகையை நோக்கிச் சென்றாள்.

ஜைத் அடிக்கடி மஜ்னூனைப் பற்றியும் அவனது அழியாப் புகழ்பெற்ற காதலைப் பற்றியும் லைலாவுக்குச் செய்தி அனுப்பி வந்தான். அவன் பூரணமாகப் பைத்தியங் கொண்டிருந்துங்கூட அவனுடைய காதலின் பரிசுத்தத் தன்மை அவனைவிட்டு அகலவில்லை.

லைலாவின் உண்மையான மனத்துயர் இப்பொழுதுதான் வேலைசெய்ய ஆரம்பித்தது. நாட்கள் பல சென்று வாரங்கள் வர வர அவளின் அழகிய வதனம் வாட ஆரம்பித்தது. அவளின் கண்கள் குழிவிழுந்தன; அவளின் பிரகாசம் பொருந்திய கன்னங்கள் மங்கவாரம்பித்தன. இவளின் தேகம் தினம் தினம் மெலிவடைந்துகொண்டிருந்தது; இவளின் இணையற்ற சோகம் இவளைச் சோர்வுறச் செய்தது. இவளின் மனமுடைந்துவிடவே இறுதியில் திடீரென மரணமடைந்தாள். மரணத் தறுவாயில் இவள் மஜ்னூனைப் பற்றியே சதா பேசிக்கொண்டிருந்



தாள். இச்சமயம் இவள் அழியாப் புகழ்வாய்ந்த ஒரு காதல் தூதை தன்னுடைய மஜ்னூனுக்கு அனுப்பிவைத்தாள். துரதிருஷ்ட வசத்தால் சொல்லொணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாய, அழிந்துவிடக்கூடிய ஓர் அழகிய உருவத்தில் இக்காதல் அமைக்கப்பட்டிருந்ததே யாயினும் இது பரிசுத்தமானதென்பதையும் அழியக்கூடாதென்பதையும் லைலா, மஜ்னூனுக்கனுப்பிய மாண்புமிக்க இறுதிச் செய்தி தெளிவுபடுத்துகின்றது.

தனது உயிர் பிரியும் தறுவாயில் லைலா அனுப்பிய செய்தியில் "அவர் முதன் முதலில் என்னைக் கட்டித் தழுவிய அதே இடத்தில் என்னை அடக்கம் செய்ய வேண்டுமென்று மஜ்னூனிடம் சொல்லுங்கள்; அத்துடன் இவ்வார்த்தைகளையும் எடுத்துரையுங்கள்: 'மஜ்னூன் தங்களுடைய கண்களை உயர்த்திப் பாருங்கள்; அதோ இருக்கும் அச்சோலையின் வெளியிடங்களைப் பாருங்கள்; அதோ பாருங்கள் ஆங்கோரிடத்தில், பிரகாசம் பொருந்திய சூரிய ஒளியில், ஒரு நீரருவி வானத்தை நோக்கிக் கிளம்பிக்கொண்டிருக்கிறது. அங்கு — அந்நீரோட்டத்தின் அருகே காதலர்கள் ஒருபோதும் மீண்டும் பிரியாதிருக்கக்கூடும் அவ்வழியாத் தன்மை வாய்ந்த நீரருவியின் பக்கல் என்னைக் காண்பீர்கள்" என்று

RangaRakes
Tamilnavarasam.com

அறிவித்திருந்தாள். இவ்வார்த்தைகளைக் கூறி முடிக்கையில் லைலாவின் உயிர் அவளின் உடலை விட்டுப் பிரிந்துவிட்டதற்கு அறிகுறியாக அவளின் தலை அந்த நீரருவி இருந்த பக்கமாகச் சார்ந்து விழுந்தது. இவளை விட்டுப் பிரிந்த ஆன்மா அழியாப் புகழ்பெற்றுள்ள காதலர்கள் கூடும் அந்த அருவியை நோக்கி விரைந்து சென்றதுபோலும்!

கிழக்கு வானில் கதிரவன் தோன்றுகையில் இரு மனிதர்கள் ஓடிவந்துகொண்டிருந்தார்கள். இவர்களில் ஒருவர் மற்றவரின் கையைப்பிடித்துக்கொண்டே ஓடிச் சென்றார். மற்றொருவரின் முகத்தோற்றம் அவர் காதலினால் பைத்தியம் கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டியது. லைலாவின் செய்தி எட்டியதிலிருந்து மஜ்னூனின் மனப்புண் பெரிதாகிவிட்டது. கட்டுப்பாட்டுக்குள்ளாகியிருந்த இவன் கானக நீரருவியை அடைவதற்குத் துடியாய்த் துடித்தான். சமயம் வாய்த்ததும் அவ்விடத்தை நோக்கி வாயுவேகமாக ஓடலானான். ஜைத் அவனைத் தொடர்ந்து சென்று அவன் கைகளைப் பற்றிப் பிடித்துக்கொண்டு ஓடினான். ஆனால் ஆவேசம் கொண்டிருந்த மஜ்னூன் ஓட்டத்தில் ஜைதைத் தோல்வியுறச் செய்தான். ஜைத் கடுமுயற்சி செய்தும் மஜ்னூனை அணுக முடியவில்லை. இதற்குள்ளாக மஜ்னூன் அக்காட்டில் புகுந்து ஓடலானான். அவன் தன் முன்னிருந்த தடைக் கல்லையோ அல்லது முள்ளையோ பொருட்படுத்தவில்லை. இவன் வெகு சீக்கிரத்தில் நீர்த்துளிகள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்த அந்த நீரருவி இருக்கும் வெளியை அடைந்தான். அவன் பைத்தியம் கொண்டிருந்தானேயாயினும் லைலாவைத் தான் முதன் முதலில் கட்டித்தழுவிய இடத்தைக் கண்டுபிடிப்பதில் அவனுக்குக் கஷ்டமிருக்கவில்லை. அங்கு புதிதாக ஓர் சமாதி அமைக்கப்பட்டிருந்தது.



மெலிந்து தளர்ந்து போயிருந்த மஜ்னூன் ஆவேசத்துடனும் ஆத்திரத்துடனும் தப்பியோடி வந்திருந்தானாதலின் முற்றும் களைப்புற்றிருந்தான். அவனது காதலும், சோகமும், பின்தோன்றிய பைத்தியமும் அவனின் உயிருக்கே உலைவைத்திருந்தன. ஆனால் இப்பொழுது அவனது உள்ளத்தில் உதித்திருந்த ஆவேச உணர்ச்சியின் மேலீட்டினால் மஜ்னூன் பூரண பலம் பெற்ற ஒரு புது மனிதனே போன்று காட்சியளித்தான். அவனது தேகம் பூராவிலும் வியர்வை கொட்டியது; அவனது முகம் பயங்கரமாகத் தோன்றியது; அவனின் கண்கள் இருண்டன; அவனின் தலை சுழன்றது; துக்க மேலீட்டால் அவனின் இருதயம் பிளப்பதாக இருந்தது; ஆவேசம் பொங்கி எழுந்தது. "ஓ! லைலா! லைலா! நான் இதோ வருகிறேன்; இதோ வருகிறேன்—உன்னிடம் விரைந்து வருகிறேன். ஆ! உன்னை மறைத்துக்கொண்டிருக்கும் இக்


Tamilnavarasam.com

கொடிய திரையை நீக்கு. நான் உன்னை அடையும்வரை ஒளி நிறைந்த இவ்வெளியில் உன் அழகை மறைத்துக்கொள்'' என்று உரத்த குரலில் கூறிக்கொண்டே மஜ்னூன் அந்தச் சமாதியின் மீது வேகமாகச் சாடினான். மறுநிமிடத்தில் அவன் உயிரற்ற பிண்டமாகத் தரையில் சாய்ந்து வீழ்ந்தான்.

மஜ்னூனின் மறைவைப் பற்றிய துக்கச் செய்தியை அவனியெங்கும் பிரகடனப்படுத்துவதற்காக சூரியன் பூரணப் பிரகாசத்துடன் தோன்றினான். மஜ்னூன் தரையில் சாய்கையில் அங்கு வந்து நின்ற ஜைதின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடிக்கொண்டிருந்தது. அப்பொழுது ஆங்கொரு பெரியார் மனித வாழ்க்கையின் அனித்தியத்தையும் அதன் ஏமாற்றங்களையும் விளக்கும் தோரணையில் துயரம் தரும் நீண்ட தொனியில் பாடிக்கொண்டே சென்றார். தன் வாணாள் பூராவையும் தனது எஜமானின் நன்மைக்காகவே கழித்து வந்த ஜைதுக்கு இக்காட்சி பெருத்த அதிர்ச்சியை அளித்தது. அவ்விருவருடைய காதலின் பரிசுத்தத்தை எடுத்தியம்புவதற்காக அவன் உயிர் வாழ்ந்தான்.

(முற்றிற்று)

RangaRakes Tamilnavarasam.com